தென்றல்

ஆசிரியர்:- கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 2 | சென்னை 12—6—56 செவ்வாய்க்கிழமை | இதழ் 50

★

முன்னுரை

மலரில் எழுதுவதாக இருந்த இந்தக் கதையை மலரில் இடமில்லாத காரணத்தால், இந்த இதழில்—சிறு காவியமாக எழுதுகிறேன்.

நெடுமாடக் கூடலகத்தில் மீன்கொடி பறந்த காலங்களில், ஒரு பாண்டியன் காலத்தைப் பின்னணியாக்கி இதைப் பின்னுகிறேன். வெறும் பின்னணி மட்டும் தான் வரலாறே தவிர, கதை என் சொந்தச் சரக்கு. தமிழக அன்னையரின் வீரத்தை விளக்குவதற்காகவே இம் முயற்சி. ஒரே இதழில் முடிக்க விரும்பினேன். கவிதை நீண்டுவிட்டதால், இரண்டுவாரங்களுக்குவரும். நடை சற்றுக் கடுமையாகத் தான் இருக்கும். பழம் பாதையிலே புதிய நடைபோடும் ஆசைதான் கவிதையைக் கொஞ்சம் இறுக்கிப்பிடித்திருக்கிறது. இதுபற்றி நண்பர்கள் கருத்துரை வழங்கினால், அவர்கள் கோரும் வண்ணம் நடையை மாற்றிக்கொள்ள - பின்பகுதியில் - முயற்சிக்கிறேன்.

'கல்லக்குடிக் காவியம்' தொடரவில்லையே என வருந்திய நண்பர்களுக்கு, இது விருந்து. கல்லக்குடிக் காவியம் பின்பகுதியில் சுயபுராணத்தையே தாங்க வேண்டியிருக்கும் என்பதாலேயே 'நில்லென்று சொல்லி நிறுத்தி வழி' வந்துவிட்டேன்.

கவர்ச்சிமிக்க பாண்டிமா தேவி தோகை நாச்சியாராக ஒரு உருவத்தை இங்கே காணுகிறீர்கள். அலுவலகத்தையே மயக்கத்தில் மூழ்கடித்த இந்த அற்புத ஓவியத்தை வரைந்தவர், தென்றல் ஓவியர் இராசன் அவர்கள். இது போன்றவை இனிப் பலப்பல வரும்.

காவியம்-9-ம் பக்கம்

★

புத்தரும் நாஸ்திகமும்

-இராகன்-

"ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது நாஸ்திகமானால் நான் ஒரு நாஸ்திகன்தான்"

இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும் இந்த ஆண்டு புத்தரின் 2500வது பிறந்தின விழா கொண்டாடப்படுகிறது. அரசியலிலும் மதத்திலும் பல்வேறு விதமான கொள்கையுடையவர்களும் புத்தர் விழாவைக் கொண்டாடுகின்றனர். சர்க்கார்கூட சிறைக் கைதிகளுக்கு புத்தர் ஜயந்தி அன்று சர்க்கரைப் பொங்கல் வழங்கியுள்ளனர். புத்தர் ஜெயந்தியைப் புராண சம்பந்தமான விழாவாக சர்க்கார் எண்ணிவிட்டார்கள் போலும்! புத்தர் விழாவில் வெவ்வேறு விதமான கொள்கையுடையவர்களும் கலந்துகொண்டது உண்மையிலேயே வரவேற்கத் தகுந்தது தான். என்றாலும், ஒரு சில பத்தாம் பசலிகள் புத்தரும் 'பத்தாம் பசலிக் கொள்கையுடையவர்' என்று நிறுவனம் செய்யமுயன்றிருக்கின்றனர். அந்த 'மூதறிஞர்கள்' பட்டியலிலே முதலாமவராக கனம் ஆச்சாரியார் அவர்களைச் சேர்த்துக் கொள்ளலாம். விதண்டா வாதத்திற்கு மட்டுமல்ல, இல்லாத கருத்துக்களையும் தமக்கென்று ஒரு தனிக் கருத்தையும் சொல்வதற்கு, தான் பேர்போனவர் என்பதை அன்றும் இன்றும் நிலை நாட்டி வருகிறார் அவர்.

இந்துமதம் செய்த கொடுமைகளால்தான் புத்தமதம் தோன்றியது. உலகின் துன்பங்களை உணர்ந்த சித்தார்த்தர் துன்பமே இல்லாத இன்ப உலகத்தைத் தேட முனைந்தார். துன்பத்திற்குக் காரணம் தேட வாழ்நாளையே அர்ப்பணம் செய்தார். சைவ சமயத்தாரும், வைஷ்ணவ சமயத்தாரும் செய்த அக்கிரமங்கள் மிகப்பல. ஆண்டவன் பேர் சொல்லி அக்கிரமங்கள் செய்த ஆலயப் பூசாரிகளைக் கண்டித்தார் புத்தர். ஆரியப் புரோகிதரின் ஆணைக்கு அடங்குவது ஆண்டவனை அடையும் மார்க்கமல்ல என்று ஆணித்தரமாகச் சொன்னார். நீரில் மூழ்குவதால் நிர்மலமுள்ளவர்களாக ஆகிவிடமுடியாது என்று எடுத்துரைத்தார். நீண்டதூரம் யாத்திரை செய்வதால், வேண்டியதெல்லாம் விளையும் என்று சொல்லித் திரிபவர்களைச் சாடினார் அவர். வேள்வியின் பேர் சொல்லி, ஆடுகளைப் பலிகொடுத்த வேதமோதிகளைக் கண்டித்தார். ஆடுகளைக் காப்பாற்றவும் செய்தார். அத்தகைய சீர்திருத்த வாதியை, பகுத்தறிவுச் செம்மலை, 'ரிஷி' என்று சொல்லி மகிழ்கிறார் ஆச்சாரியார். கருப்பை வெள்ளை

என்றும், வெள்ளையைக் கருப்பென்றும், சிவப்பைப் பச்சை என்றும், பச்சையைச் சிவப்பென்றும் சொல்வதிலே – சொல்லித் தோற்பதிலே ஆச்சாரியாருக்கு நிகர் ஆச்சாரியார் தான். அவருடைய இந்த நிலையைக் கண்டு உண்மையிலேயே நாம் பரிதாபப் படுகிறோம்; பச்சாதாபப்படுகிறோம்.

அவர், பகுத்தறிவு வாதியை'ரிஷி' என்று சொல்லி உலகத்தை ஏமாற்ற முற்பட்டதுமல்லாமல் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ள முற்பட்ட நேரத்திலே, இந்தியத் துணைக்கண்டத்தின் துணைத்தலைவர் ராதாகிருஷ்ணன் வேறொரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். ஆச்சாரியார்போல் அவர் தடுமாறவில்லை. பிறரை ஏமாற்றவும் முற்படவில்லை. தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ளவும் இல்லை! பச்சையைப் பச்சை என்றே சொல்கிறார். சிவப்பைச் சிவப்பென்றே செப்பியிருக்கிறார். ஆம்! புத்தரைச் சிறந்த பகுத்தறிவு வாதி என்றுதான் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியப் பிரதமர் நேரு சொல்லியுள்ளதும் முற்போக்கானதுதான். "புத்தர் கடவுளல்லர்! தேவர் அல்லர்! அவர் ஒரு சாதாரண மனிதர்தான்!"–நேருவின் கருத்து இது. எந்தஉண்மையையும் உணர மறுக்கும் நேரு–உணர்ந்தாலும் ஒப்புக்கொள்ள மறுக்கும் நேரு – அவரே ஒப்புக்கொண்டுள்ளார் – புத்தர் தெய்வமல்ல – தேவனல்ல–தேவதையல்ல என்று. ஆனால் வைதீக புரியினர் அவரைத் தெய்வமாக்கி மகிழ்கின்றனர். இருபதாம் நூற்றாண்டிலும் இந்த இழி தன்மையாளர்களின் புத்தி சீர்படவில்லையே என்று எண்ணித்தான் வருந்துகிறோம்.

இந்த நேரத்திலே அறிஞர் அண்ணா அவர்கள் கூறிய அருங்கருத்து இங்கே நோக்கத்தக்கது. "புத்தர், மதம் – கடவுள் ஆகியவற்றின் பேரால் மக்கள் கொண்டிருந்த மூடப்பழங்களைக் கண்டித்தார். அவர், சாதிப் பாகுபாடுகளை–மனிதருக்கு மனிதர் நிலவும் வேறுபாடுகளை–எதிர்த்த சிறந்த பகுத்தறிவு வாதி என்பது மட்டுமல்ல–ஒரு பெரிய புரட்சிக்காரர். அவர் அரண்மனையை விட்டு வெளியே வந்ததே புரட்சிகரமான செயல்"–அண்ணா அவர்கள் புத்தர் ஜெயந்தியிலே கலந்துகொண்டு சொற்பொழிவாற்றியபோது சொன்ன அறிவுத்துளிகளில் ஒன்று. மாளிகை வாசத்தையும் – மனையாளையும் பெற்ற மகனையும் விட்டு–ஆரண்யத்தில் அலைய முற்பட்டது அவர் உள்ளம் என்றால், உண்மையிலேயே அவர் ஒரு புரட்சிக்காரர்தான்.–சுகமாக வாழ்வதை விடுத்து, துயருற்ற மக்களின் துயர் களைய முற்பட்ட புத்தர், பெரும் புரட்சிக்காரர்தான்.

ஆஸ்திக அன்பர்கள் அதிகரித்திருந்த அந்த நாட்களிலே – பகுத்தறிவு வாதியை நாஸ்திகன் என்று எண்ணிவந்த அந்த நாட்களிலே பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்த பண்பாளர் புத்தர்தான். அத்தகைய புரட்சிக்காரரைப் புராண நம்பிக்கையுடையோர் கடவுளாக்கி மகிழ்கின்றனர்.

உலக வரலாற்றிலே மதத்திலே நம்பிக்கை கொண்டு மதம்பிடித்துத் திரிந்த மக்களுக்கிடையே அறிவுப் பிரச்சாரம் செய்யும் பகுத்தறிவு வாதிகளுக்குக் கிடைத்ததெல்லாம் கடுந் துன்பந்தான். புத்தர் மட்டும் விதிவிலக்காக இருந்துவிடவில்லை. அத்தகைய துன்பங்களை அடைந்தபோதிலும் அவர் உள்ளம் துவளவில்லை. மாறாக அறிவு பெறாத மக்கட் கூட்டத்திற்கு அறிவுறுத்துதலிலேயே வாழ்நாளைக் கழித்தார். பட்டினி கிடப்பதெல்லாம் ஆண்டவனை அடையும் மார்க்கமல்ல என்ற அறிவுரையைச் சொன்னவர் புத்தர் —வேதமோதிகளைக் கண்டித்தவர் புத்தர். உண்மையிலே இப்படிச் சொல்வது நாஸ்திகம் என்று தவறாக ஆஸ்திக அன்பர்கள் நினைத்துக்கொண்டால் உண்மையிலேயே புத்தர் நாஸ்திகர்தான். பகுத்தறிவு வாதியை நாஸ்திகன் என்று சொல்லி வருகிற விந்தை மனிதர்களை எண்ணும்போது நமக்கு......

ஆஸ்திக அன்பர் ,ஆச்சாரியார் புத்தரை வேதாந்தச் சிமிழிலே அடைக்க முற்பட்டதை எண்ணி நாம் வருந்துகிறோம். அவரது எண்ணமும் இதயமும் இனியாவது சுத்தமாகாதா என்று ஏங்குகிறோம். தீவிரமான பகுத்தறிவு வாதியை ஆஸ்திகவாதி என்று சொல்லி அரவணைத்துக்கொள்ளும் ஆச்சாரியாரின் போக்கைக் கண்டு நாம் துக்கிக்கிறோம்! அதே நேரத்திலே ஆச்சாரியார் பால் அனுதாபமும் பிறக்கிறது நமக்கு.

புத்தர் விழாவிலே வானொலியில் பேசச் சொன்னால் பேசாமல் உண்மை வரலாற்றைப் பற்றி அவர் பேசிவிட்டுச் சென்றிருந்தால் அதிலே எந்த விதமான தவறும் ஏற்படாது; ஏற்படமுடியாது. அதை விடுத்து சித்தார்த்தரை–'ரிஷி' பரம்பரைகள் கூடாது என்று எண்ணிய புத்தரை, 'ரிஷி' என்று சொல்லிப் பெருமை அடைய எண்ணிய அவரது போக்கு கோமாளித்தனமானது மட்டுமல்ல; கூப்பிட்ட இடத்தில் ஏதோ பேசவேண்டும் என்று எண்ணிப் பேசுகிற அலட்சியப் போக்கு என்பதை மறுக்க முடியாது. ★

வானொலியில் கண்ணதாசன்

ஆசிரியர் கண்ணதாசன், 23-6-56 சனிக்கிழமை இரவு 8-40 மணிக்கு சென்னை வானொலியில் பேசுகிறார்.

பொருள் :
எனக்குப் பிடித்த பகுதி :
மனுதார்கள் தேவை

அடுத்த இதழில்!

"அட என் லட்சிய வீரா!"
— கண்ணதாசன் —
எழுதும்
அரசியல் கட்டுரை

"அரளிக்கோட்டை"
தென்னரசு
எழுதும்
சரித்திரக் கதை

நீங்களும் நாங்களும்

மலர்

'தென்றல்', மாநில மாநாட்டு மலர் பற்றி பல நண்பர்கள் கருத்துரை வழங்கியுள்ளனர். மலர் மிக நன்றாக அமைந்துள்ளது என்று பலரும் எழுதியுள்ளனர். அவர்களுள் ஒரு பகுதியினர், மலரில் பக்கங்கள் குறைவு எனக் குறைப் பட்டுள்ளனர். அது உண்மைதான் எனினும், படங்களும் பிளாக்குகளும் அதிகமாகச் செய்யவேண்டி வந்ததாலும், நல்ல 'கிளேஸ்' பேப்பரில் அச்சிட்டமையாலும்தான் பக்கங்களைக் குறைக்க வேண்டி வந்தது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். மற்றபடி,பொங்கல் மலரை நல்லமுறையில் செய்ய நான் உறுதியளிக்கிறேன். நிற்க.

ஏஜண்டுத் தோழர்கள் பலர், முன்பணம் அனுப்பாமலேயே 'மலர் மலர்'' என்று எழுதினார்கள். அதனால்தான் அவர்களுக்கு மலர் அனுப்படவில்லை. எந்த மலரும் முன்பணமின்றி அனுப்படுவதில்லை என்பதைத் தோழர்கள் உணர வேண்டுகிறேன். இனி யாரும் மாநில மாநாட்டு மலருக்கு எழுத வேண்டாம். மலர் ஒரு பிரதிகூடக் கைவசமில்லை.

◉

மனம் போல வாழ்வு

அடுத்த இதழில், 'மனம் போல வாழ்வு' தொடர்கதை துவங்குகிறேன். ஒரே மனிதன் இரட்டை வாழ்வு வாழ்வதையும், வெளியுலகில் 'காந்தியம்' பேசும் ஒருவன், வீட்டுக்குள் – நான்கு சுவர்களுக்கு நடுவே–எப்படி நடந்துகொள்கிறான் என்பதையும் சுவைபட விளக்கும் இத்தொடர்கதை. மனித மனத்தின் குழப்பங்களை, ஆசாபாசங்களை அழகுறச் சித்தரிக்கும். உங்கள் நகர் ஏஜண்டுத் தோழரிடம் இப்போதே பதிவு செய்து கொள்ளுங்கள்.

—கண்ணதாசன்

வாழ்க

புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களது தமையனார் திரு. எம். ஜி. சக்கரபாணி அவர்களது குமாரத்தி செல்வி **சத்தியபாமாவுக்கும்**, செல்வன் **ஏ. இராசன்** அவர்களுக்கும் 23-5-56 அன்று மாலை 6 மணிக்கு சென்னையில் **அறிஞர் அண்ணா** அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது.

கலைவாணர் என். எஸ். கே, பேராசிரியர் க. அன்பழகன், என். வி. நடராசன், மதியழகன், மு. கருணாநிதி, டி. வி. சுந்தரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மணமக்கள் இன்புற்று வாழ்க என வாழ்த்துகிறோம்.

பிறப்பு

மதுரை மாவட்ட தி.மு.கழகச் செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் திருமதி ரஞ்சிதம் கடந்த 26-5-56 சனிக்கிழமையன்று பெண் மகவு ஒன்றுக்குத் தாயானார்கள்.

"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் : அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 2 || 12—6—56 || இதழ் 50

அவர் வீரம்!

கடந்த ஒருவார காலமாக மொழி வளர்த்த மதுரை நகரில் தமிழ்ச் சங்கப் பொன் விழா நடந்து வருவதைத் தமிழகம் அறியும். உலகத்தைக் கவர்ந்த தாய்மொழிக்கு முடிசூட்டி மகிழ்வது குறித்து தென்னாடு பூரிப்படைந்திருந்தது. சர்வகட்சித் தலைவர்கள் கலந்து கொண்டு தமிழ்மொழிக்கு நன்றி செலுத்துகிறார்கள்; வாழ்க, வளர்க, அந்தப் பண்பு என்று எண்ணிக் குதூகலித்தோம். ஆனால் அந்தக் குதூகலம், விழாவின் துவக்கத்தோடு மறைந்துவிடக் கூடிய அளவில் ஒருசிலர் நடந்து கொண்டிருப்பதாகப் பத்திரிகைகள் நமக்குத் தெரிவிக்கின்றன.

தமிழ்ச்சங்கப் பொன் விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஆச்சாரியார் வழக்கம்போலத் தனது விஷமத்தனத்தைச்செய்துவைத்து, குழப்பத்திற்குத் துவக்க விழா நடத்திவிட்டு வந்திருக்கிறார். ஆரிய திராவிடப் பிரச்சினையைக் கிளப்பி விட்டு, 'அதெல்லாம் இப்போது ஏது? திராவிடமும், ஆரியமும் இப்போது ஒன்றாகக் கலந்துவிட்டது என்று கூறி, தன உடம்பில் திராவிட ரத்தம்தான் ஓடுகிறது என்று கூறுகிற அளவுக்கு அவர் தன்னுடைய விஷமப் பிரச்சாரத்தை நீட்டியிருக்கிறார். சாக்கடையைக் குழப்பி, சங்கத்து விழாவில் துர்நாற்றம் வீசச் செய்ததுமல்லாமல் தமிழ்ப் பண்டிதர்களை வேறு சாடியிருக்கிறார் அந்த அரசியல் சந்நியாசி. புலவர்கள் அவர்களுக்குண்டான வேலைகளை விடுத்து ஆரியம், திராவிடம் போன்ற பிரச்சினைகளைப் போதிக்கிறார்களாம்! ஆச்சாரியார் சொல்கிறார் இப்படி. தமிழ்ப்புலவர்கள் என்றாலே மொழிதான் அவர்களுக்குப் பிரதானம். அவர்கள் மொழியை எடுத்துக்கொண்டால் இனவரலாறு முக்கியம் குறுக்கிடும். கண்விழித்துப் பாடுபட்டுக்கற்றறிந்த புலவர் பெருமக்கள், 'கன்னித் தமிழ் வளர்த்தோன் கட்டைவிரல் அகத்தியன்' என்று சொல்லுவார். ஆச்சாரியார் அதைத்தான் எதிர்பார்க்கிறார். தமிழைப் போதிப்பதைத் தொழிலாகக் கொண்டு தன் தரித்திரத்தைத் துடைத்துக் கொள்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் 'அவர்களாக' இருந்தாலும் ஒருபோதும் தமிழை அவ்வளவு எளிதிலே தோன்றிய மொழி என்று சொல்லிவிடமாட்டார்கள். ஆனால் ஆச்சாரியார் சொல்கிறார், புலவர்கள், அவர்கள் வேலையைவிட்டு வேறு காரியம் பார்க்கிறார்களாம். இந்த இடத்தில் ஆச்சாரியார் ஒரு கணம் தன்னைப் பற்றிச் சிந்தித்துப்பார்த்திருந்தால் நரம்பில்லாத அவருடைய நாக்கு மடிந்திருக்க நியாயமில்லை. தமிழ்ப் புலவர்கள் தேவையில்லாமல் தலையிடுகிறார்கள் என்று குற்றம் சாட்டுகின்ற ஆச்சாரியார் தான்மட்டும் ஏன் இந்தத் தகராறில் தலையிட வேண்டும் என்பதை அவர் சிந்தித்துப் பார்க்கத் தவறிவிட்டார். தமிழ் கற்ற புலவர்கள் தலையிடுவது பாவம் மொழி கற்ற மேதைகள் உண்மையைச் சொல்லுவது குற்றம்; மொழியைப்பற்றிச் சிறிதும் அறியாத ஆச்சாரியார் மட்டும் தலையிடலாமா?

ஆச்சாரியார் ஏன் தலையிட்டார் என்று நாம் கேட்கவில்லை. யாரும் தலையிட்டுப் பேசுவதாலே எங்களது கொள்கை வலிவிழந்துவிடும், ஒடிந்துவிடும் என்ற அச்சம் எங்களுக்கு என்றுமே இருந்ததில்லை. ஆனாலும் ஆச்சாரியார் இதுபற்றி யோசிக்காதது, சாகப்போகிற காலத்திலே அவர் தமிழகத்துக்குச் செய்துவரும் குற்றங்களிலே மிகப் பெரியதாகும்.

முறுக்குள்ள வாலிபப் பருவத்திலிருந்து முதுகிழவராகி விட்டிருக்கும் இந்தக் காலம்வரை ஆச்சாரியர் ஆரியமும், திராவிடமும் கலந்துவிட்டது என்றுதான் பேசி வருகிறார். கலந்துவிட்டதாம்! எங்கே கலந்தது?

பஞ்சகட்சம், பக்திப்பட்டயம், பறக்கும் குடுமி - வளர்ந்து கொண்டு போகிறது. எட்டிப்போ என்றால் சிறைதண்டனை-என்று அறிவிக்கும் சுவரொட்டி மிரட்டலுக்குள்ளாகி ஒளித்துவைக்கப் பட்டிருக்கிறது; ஆலயப்பிரவேசச் சட்டம் பெட்டிப்பாம்பாகி ஒடுங்கிக் கிடக்கிறது.

ஆச்சாரியார் சொல்கிறார் ஆரியமும் திராவிடமும் கலந்துவிட்டதாம்!

தனிச் சலுகை இன்னும் சாகவில்லை! தக்கோரைக் கலவாமல் தாசர்களை உருவாக்கும் திட்டங்கள் பெருகுவது குறையவில்லை!

பாவ மன்னிப்பு! அதற்குப் பாத காணிக்கை! காலை பூஜை, மாலை ஜபம்!–என்றநிலை கொஞ்சங்கூட மாறவில்லை.

—ஆச்சாரியார் சொல்கிறார் ஆரியமும் திராவிடமும் கலந்துவிட்டதாக! எங்கே கலந்தது? எப்பொழுது கலந்தது? காரிருள் வேளையில் காவிரிக்கரையின் இருமருங்கிலும் கலப்பதை வைத்தா பேசுகிறார் ஆச்சாரியார்? அந்தோ பரிதாபம்! கணக்கற்ற தடவைகள் களத்திலே மோதி தோல்விக்குறி பெற்றுப்போன சக்கை வாதத்தை இந்த முறையும் ஆச்சாரியார் களறிக்குத் தூக்கிவந்திருக்கிறார். அதற்காகப் பரிதாபப்படுகிறோம். ஆனால், மழுங்கிப்போன ஆயுதத்தைக் கொண்டுவந்து மூக்கறுபட்ட ஆச்சாரியாருக்காகவும், புறையோடிப்போன பழைய கருத்துக்களுக்கு வக்காலத்து வாங்கும் வகையிலும், காங்கிரசின் மாஜி முன்னோடி ஒருவர் நமது அண்ணா அவர்களையும் தமிழ்ப் புலவர்களையும் தாக்கிப் பேசியதாகச் செய்தித்தாள்கள் தெரிவிக்கின்றன. முயலைப்போல் விரைந்தோடி, வேதாந்த மரத்தடியில் தூங்கி விழுந்த, காரணத்தினால் பின்னே ஊர்ந்து வந்த ஆமைக்கு முதற் பரிசை விட்டுவிட்ட அந்த மாஜியைப் பற்றி நமக்கு நன்றாகத் தெரியும், அண்ணாதுரை போன்றாருக்குத் தமிழ்ச் சங்கப் பொன் விழாவில் பேச இடம் தந்திருக்கக் கூடாதாம்! யார் சொல்லுவது இப்படி? தமிழுக்கு விரோதமான வேத உபன்யாசத்திலே ஈடுபட்டிருக்கிற அரசியல் வேதாந்தி ஒருவர் பேசியிருக்கிறார். "இசையிலே மொழித் தகராறு ஏன்? நமக்கு இனிமை தானே முக்கியம்" என்று அக்ரகாரங்கள் சொன்னபோது, "தவறு தவறு! இசையும், அது தரும் பாடலிலே, பொருள் தரும் தமிழ்ச் சொற்களும் இருந்தால் தான் இசைக்கலையால் பயனுண்டு என்று அடித்துப் பேசிய அண்ணாவுக்குத் தான், ஜெபமாலை உருட்டிக்கொண்டிருக்கும் ஒரு 'மாஜி' கேட்கிறார் அண்ணாதுரைக்கு தமிழ்ச் சங்கத்தில் இடமா? என்று. மேடைத்தமிழ் சொல்லும், மேன்மை மிகுந்த நாடகத்தமிழ் சொல்லும்; கல்லூரிகள் கூவியழைக்கும்; கலையுலகு சான்று பகரும், 'அண்ணாதுரை தமிழை வளர்த்தார்! தமிழை வளர்த்தார்!' என்று. அரசியலில் துறவியாகி 'அணுவை அறிகிறேன்' என்று சொல்லிக்கொண்டே! 'அரகர நமப் பார்வதிபதே!' போடுகிறவர்களுக்கும் தமிழ்ச் சங்கத்திற்கும் என்ன தொடர்பு என்று கேட்டிருந்தால் அதில்பொருளுண்டு. மெய்ப்பிக்கமுடியாத காரியங்களில் மனதைச் செலுத்துவதை விட்டு, 'மெய்ப்பொருள்' காணும் சோம்பேறித் தொழிலை அகற்றி முப்பதாண்டு கால அரசியல் வரலாற்றையும் தமிழின் எழுச்சியையும் புரட்டிப் பார்த்துவிட்டுக் கேட்கட்டும் அண்ணாதுரைக்கும் தமிழுக்கும் என்ன தொடர்பு? என்று. எவர் துணிவர் கேட்க? இன்னும் தங்கள் வாயைவிட்டு 'சகோதர சகோதரிகளே' என்று வார்த்தைகளை அகற்றாதவர் தான் கேட்கிறார், 'அண்ணாதுரைக்கு தமிழ்ச்சங்கத்தில் பேச வாய்ப்பா?' என்று. மேடைக்குப் பஞ்சமேற்பட்டது யாருக்கு என்று ஒருமுறை நாட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டுக் கேட்கட்டும். எங்கும் எந்தப் பொருளைப் பற்றி யார் பேசுவதானாலும், அங்கே ஒரு 'சின்ன அண்ணாதுரை' யாவது இருந்தால்தான் கூட்டம் கூடும் என்ற நிலையை உணர்ந்து அவர்கள் உக்கிச் சாவார்கள்.

அன்னை நாட்டைக் காப்பாற்ற முன் வராமல், அகிலத்தைப் பற்றிப் பேசுவோர், யாகத்தாலும், யோகத்தாலும், மௌன விரதத்தாலும் இழந்துவிட்ட மக்கள் சக்தியை மீண்டும் பெற்றுவிடத் துடிப்போர், ஆண்டவனை நிந்திப்போர் 'ஒரு கோழிமுட்டை செய்யட்டும் பார்ப்போம்' என 'ஆப்பிள்' செய்யும் காலத்தில் கேட்போர் கொதித்தெழுந்து நிற்கும் தென்னாட்டின் வலிமையை நுனி நாக்கில் வைத்துக்கொண்டிருக்கும் தலைவர் அண்ணாவைத்திட்டிப்பேசி அரசியல் வானத்தில் 'நட்சத்திர'மாகப் பார்க்கிறார்கள். அவர்களிலே ஒருவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் என்கிறபோது நமக்குச் சிரிப்புத்தான் வருகிறது.

அந்தப் பசும்பொன் வாசிதான் அண்ணா அவர்களையும், இயக்கத்தையும் கீழ்த்தரமான வகையில் தாக்கிப் பேசியிருக்கிறார். வாதுக்கழைப்பாராம்! சவால் விடுகிறாராம்! கற்றறிந்தோர் புரிந்துகொண்ட அண்ணாவை காவியுடைக்காரர்கள் புரிந்துகொள்ளாதது விந்தைக்குரியதல்ல. சரித்திரம் கற்றோர் சவால் விடுத்து ஓய்ந்து ஒடுங்கிய பிறகு, சங்கத்தமிழ் கற்றோர் 'தோற்றேன்' என ஓடிய பிறகு, ஆத்மாவை அறியத்துடிக்கும் இந்த அடியார்க்கு அடியார் சவால் விடுகிறார். அண்ணாதுரை தன் கூற்றுக்குப் பதில் கூறுவார்; அதுவே தனக்கும் பெருமை என எண்ணி ஏமாந்தார் பசும்பொன்னார். பாவம். முத்துராமலிங்கரின் கூற்றுக்கு தத்தி விளையாடும் குழந்தைகளே பதில் கூறிவிடுமே! அறிஞர் அண்ணாவா சொல்லவேண்டும்! அப்படியென்ன ஆராய்ச்சிக்குரிய கேள்வியைக் கேட்டுவிட்டார் தேவர்? ஆத்திரத்தால் உந்தப்பட்டார் அவர். அவ்வளவுதான்! அதை மெய்ப்பித்தார் அறிஞர் அண்ணா.

"ஆத்திரம், பயமாகி, பயம் பாசமாவதுதான் மனித குணம். இப்போது தேவர் ஆத்திரப்பட்டிருக்கிறார். நமது கண்ணியம் அவருக்கு பயத்தைக் கொடுக்கும்; அந்த பயம், அவரை நம்மிடம் இழுத்து வரும்." என்ற உன்னத தத்துவத்தை அறிஞர் அண்ணா கடந்த மூன்றாம் தேதி மெய்ப்பித்துக் காட்டினார். தேவருக்கு அண்ணாதுரை பதில் சொல்வார் என்ற எண்ணத்தில் துடிப்போடு மதுரை பொதுக்கூட்டத்திற்கு வந்தார்கள். அண்ணா கண்ணியத்தால் தேவரின் ஆத்திரத்திற்கு 'பய' உரு கொடுத்து வந்திருக்கிறார்.

இவர்

விநோத மனிதர் விஞேபாஜி யாரோ, எப்படியிருப்பாரோ, எத்தன்மையினரோ, எவ்வண்ணத்தவரோ என்று நேரில் கண்டு 'தரிசிக்க' விழுந்தடித்துக் கொண்டு சென்றேன், சென்ற திங்களில் தியாகராயநகர் — அவாள் பாஷையில் மாம்பலம்— இந்தி பிரசார சபை மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் விஞேபா என்ற பெயரை நிச்சயம் தமிழகத்தார் எவரும் கேள்விப்பட்டிருக்கவில்லை. திடீரென்று காந்தியார் தனிநபர் சத்தியாக்கிரகம் துவக்கியபோது இம்மனிதரை முதல் சத்தியாக்கிரகியாகத தேர்ந்தெடுத்தார். அந்த நிகழ்ச்சி முடிவுற்றபின் சமீபகாலம் வரையில் அவர் பெயர் வெளியில் அடிபடாமலே இருந்து வந்தது. மீண்டும் திடீரென்று சில ஆண்டுகளாக பத்திரிகைகளில் விஞேபாவின் படமும் பெயரும் அச்சிடப்பட்டு வருகின்றது. ஆரியப் பத்திரிகைகள் அமர்க்களமாக ஆரவாரத்துடன் விஞேபாஜியைப் புகழ்கின்றன; போற்றுகின்றன.

இந்தி பிரசார சபை மைதானத்திலே பார்ப்பனர் பெரும்பான்மையினராய்த் திகழ்ந்த சபையினிலே 'பச்சைத் தமிழர்' காமராஜர் முன்னிலையிலே விஞேபாஜி பேசுகையிலே "தங்கள் பூதான இயக்கத்திற்கு என்னால் ஒரு நன்மையும் செய்ய முடியவில்லையே' என்று ராஜாஜி 'வருத்தப்பட்டுக் கொண்டார்; நான் அவரிடம் 'தங்களைப் போன்ற பெரியவர்களின் ஆசீர்வாதம் ஒன்றே போதும்' என்று பதில் கூறினேன்." என்று குறிப்பிட்டார். தமிழ் நாட்டாரால் நயவஞ்சக நரி என்று வெறுத்தொதுக்கப்பட்ட ஒருவருடைய ஆசீர்வாதம் தேவையாம் இவருக்கு. இதையும் தைரியமாக தமிழ் நாட்டின் தலைமையமைச்சர் முன்னிலையில் தமிழ்நாட்டிலே துளியும் அச்சமின்றி எடுத்தியம்புகின்ருர். ஐயகோ தமிழ்நாடே இதுவோ உன் தலைவிதி' என்று என்னை நானே நொந்து கொண்டேன். மனிதராவது பார்வைக்கு,மரியாதைக்கும் மதிப்புக்கும் உரியவராய்க் காட்சியளிக்கிருரா என்று அருகில் சென்று பார்த்தேன். பூ, இவ்வளவுதானு இவர்-என்ற எண்ணமே மேலோங்கி நின்றது. உத்தமர் காந்தியார் மறைவுக்குப் பின் அவர் ஸ்தானத்தை அலங்கரிக்கும் உத்தேசம் கொண்டுதான் போலும் அவர் போலவே உடையணிந்து மக்கள் மத்தியிலே நடமாடும் இவரை 'இமிடேஷன் காந்தி' என்றே கூறிடத் தோன்றுகிறது. உண்மை வைரம் எது? இமிடேஷன் வைரம் எது என்று சிந்திக்கும் திறனுடையார் துணிவர்.

விஞேபாவின் பேச்சிலே புதுமை இல்லை; புரட்சி மணம் வீசவில்லை. அவர் கருத்து பிற்போக்குக் கருத்து. அவர் சொல்லில் வல்லவரல்லர். பார்வைக்கு அவலட்சணமே உருவாய் அமைந்த தோற்றம். மக்களைக் கவரக்கூடிய சக்தியோ திறஞே அல்லது 'தேஜஸோ' அற்றவர். உத்தமர் காந்தியாரையும் அவர்தம் புன்னகையையும் கண்ட அவர் எதிரியும் அவரால் கவரப்படவில்லையென்ருலும் அவருக்கு மரியாதை செலுத்தினர். விஞேபாவிடத்திலே அந்தக் கவர்ச்சியும் இல்லை. முரண்பட்ட மனிதரென்றுதான் பண்பாளர் நிறைந்த நம் நாடு அவர்பற்றி முடிவுகொள்ள வேண்டியிருக்கிறது.

தாடி வேறு வைத்துக்கொண்டுள்ளார்; சகிக்கவில்லை. பெரியார், தாகூர் போன்ருரின் அழகிய தாடி இவருக்கு இல்லை. பின் ஏன் தான் தாடி வளர்த்துக் கொண்டிருக்கிருர்? அதுதான் புரியவில்லை. க்ஷவரகத்தி கண்டு பிடிக்கப்பட்ட காலத்திற்கு முன் தோன்றியிருக்க வேண்டிய ஓல்ட் மாடல்', இருபதாம் நூற்ருண்டு இந்தியப் பொது வாழ்க்கையில் காலடியெடுத்து வைத்திருக்கின்றது.

மாம்பலத்து மாக்கியவல்லி ராஜாஜியின் கடைசி முயற்சி விஞேபாவின் மூலம் நடைபெறுகின்றதோ என்று ஐயம் கொள்ளும் வகையில் காரியங்கள் நடைபெற்றவண்ணம் இருக்கின்றன. சென்னையிலே விஞேபாஜி ராஜாஜியைப் போற்றினுர். காஞ்சியிலே ராஜாஜி விஞேபாஜியை வானுலக வீதியிலே தூக்கி நிறுத்தினுர். இழந்த செல்வாக்கை மீண்டும் பெற, இருக்கும் தமிழமைச்சரவை தாழ்வுற வரும் தேர்தலுக்குப் பின் தாமே முதலமைச்சராய் முடிசூட விஞேபாஜியைக் கைப்பாவையாக உபயோகப்படுத்துகிருர் கருப்புக் கண்ணுடிக்காரர். முன்னரோர் முறை தமிழகத்துப் பொது வாழ்க்கையிலே பல்லக்குச்சவாரி செய்வான் வேண்டி, பொது மக்களின் வெறுப்புக்கு ஆளாகியிருந்த நேரத்திலே தமிழ் நாட்டுக் காங்கிரசை காமராஜிடமிருந்து பிரித்துவிட முடியாது என்றிருந்த சூழ்நிலையிலே— அதாவது 1946-இலே எப்படி காந்தியாரைத் தமிழகத்துக்கு அழைத்து வந்து பவனி வரச் செய்தாரோ அதே முறையை இந்த 1956-ஆம் ஆண்டிலே இமிடேஷன் காந்தியைக் காட்டி தமிழர் கண்களைக் கட்டி மீண்டும் முதல் அமைச்சர் பதவியைக் கைப்பற்றலாம் என்ற எண்ணத்தில்தான் ராஜாஜி சூழ்ச்சி செய்கிருரோ என்று கருதுகின்றனர் விஷயமறிந்தோர்.

மொத்தத்தில் விஞேபாஜியின் வித்தை சீசன் அரசியல்'— அவ்வளவுதான்!

—க.

நூல் நயம்

'ஆடும் மாடும்'–ஒரு மகத்தான இலக்கியம்

தமிழிலே பெருங் கதைகள் பெருகி வளர்ந்துள்ளன. எதைப்படிப்பது என்று புரியாத அளவுக்கு ஏராளமான நூல்கள் வெளி வந்துள்ளன. படித்தவன் உடனே திருந்தக்கூடிய அளவுக்குச் சிலவும், படித்தவன் உடனே கெட்டுப் போகும் அளவுக்குப் பலவும், படித்து முடித்த பிறகும் 'இது என்ன கதை' என்று புரியாத அளவுக்கு ஒரு சிலவும் எனப் பலவகைப்பட்ட பெருங்கதைகள் வெளி வந்துள்ளன. தமிழிலே பெருங்கதை இலக்கியத்தை ஊக்குவித்த பணி, காண்டேகரது மொழி பெயர்ப்புப் பெருங்கதைகளைச் சாரும். அதற்கு முன் வந்த தமிழ் எழுத்தாளர்களின் பெருங்கதைகள் பெரும்பாலும் ஒரு சமூகத்தின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டே இயங்கி வந்தன. ஒரு சிலர் மட்டுமே வேறு அடிப்படையிலும் எழுதினர்கள். என்ருலும் காண்டேகருடைய பெருங்கதைகளில் காணப்படுவது போன்ற தத்துவங்கள் அவற்றிலே காணப்படாமல் இருந்தன. ஒரு பெருங்கதையின் சிறப்புக்கு அதன் இடையிடையே வருகின்ற தத்துவந்தான் துணைபுரிகிறது. அறிஞர் அண்ணு அவர்கள் எழுதிய 'ரங்கோன் ராதா', 'பார்வதி பி ஏ.' முதலிய பெருங்கதைகளில் தத்துவங்களைப் பரக்கக் காணலாம்.

சமீபத்தில் வெளி வந்துள்ள பல பெருங்கதைகள் வெறும் குப்பை கூளங்கள் தான். இவை மனிதனுடைய கீழ்த்தர ஆசைகளைத் திருப்திப்படுத்துவதோடு தங்கள் சேவையை முடித்துக் கொள்கின்றன. இவை புரட்சிகரமான படைப்புக்கள் என்று அழைக்கப்படுவதுதான் பெரும் வேதனை. இந்த வேதனைக் கிடையில் ஒரு விடிவெள்ளி போல் தோன்றியுள்ளது தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் எழுதிய 'ஆடும் மாடும்' என்ற பெருங்கதை. நூலின் தலைப்பே அதன் கருப்பொருளைத் தத்துவமாகப் போதிக்கிறது. ஆசிரியர் கையாண்டிருக்கும் நடை கதையைச் சிக்கலில்லாமல் கொண்டு செல்கிறது. கதையிலேயே பொதுவாழ்வின் திரை முறைகளைக் கொணடுவந்து தத்துவத்தோடு விளக்குவது சுவையாக இருக்கிறது. ஆசிரியர் படைத்த கதாபாத்திரங்கள் முழு உருவத்தோடும் இழை பிசகாத குணத்தோடும் உலா வருகின்றன. அப்பழுக்கற்ற பாத்திரங்கள் சிலவும் அனுபவப்பட்ட பாத்திரங்கள் சிலவும் நம்முடைய சிந்தனைக்கு வேலை கொடுக்கின்றன. வாழ்க்கை என்பது தண்டவாளத்தில் புகைவண்டி ஊர்வது போல ஒரே பாதையில் ஒரே மாதிரி மனிதர்களைக் கொண்டு செல்வதல்ல. கதம்ப உலகம்— கலப்பட மனிதர்கள்—சிக்குப் பிடித்த சிந்தனைகள் இவ்வளவும் கொண்டுதான் வாழ்க்கை வண்டி ஊர்ந்து செல்கிறது. இந்தப் பெருங்கதையும் அத்தனை பிரிவுகளையும் கொண்டு நடக்கிறது. இந்தப் பிரிவுகளைத் தெளிவாகக் காட்டும் முயற்சியில் ஆசிரியரின் கதை ஓட்டம் சற்றுத் தடைப்பட்டு மழை நின்ற பிறகு கூரையிலிருந்து விழும் சொட்டுக்கள் போன்ற சம்பவங்கள் மெது மெதுவாக வந்து விழுகின்றன். இந்தக் குறையை நிறை செய்கிறது ஆசிரியர் வழங்கும் தத்துவங்களும் கதாபாத்திரங்களின் பண்பும்.

"விளம்பரத்திற்காக வேலை செய்பவர்கள் யாராயிருந்தாலும் வெட்கங்கெட்ட நிலைக்குத் தானே வந்துவிடுகிருர்கள்?"— என்கிருள் சுந்தரி. இதை யார் மறுக்க முடியும்? கண் முன்னுலேயே தினசரி காண்கிருேமே!

அதே சுந்தரி சினிமா உலகத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது சினிமாவில் ஒரு பெண்ணைச் சேர்க்க வந்த வாலிபனிடம் இப்படிக் கூறுகிருள்: "ஆதாயம் உண்டு என்று தெரிந்தாலொழிய எவரையும் இங்கே அழைக்க மாட்டார்கள். எல்லோருமே தாமாகத்தான் உள்ளே வர வேண்டும். வரும்போது உங்களைப்போலத்தான் இருப்பார்கள். இருக்கும் வரை என்னைப் போலக் காணப்படுவார்கள். விலகும்போது வந்த மாதிரியே திரும்புவார்கள்."—சினிமா உலகில் அனுபவப்பட்டவர்களுக்கு இந்த வார்த்தைகளின் உண்மை புரிய வரும். இப்படிப்பட்ட தத்துவங்கள் ஏராளமாகக்

— 11-ம் பக்கம் —

செல்வத்திற்கு,

எனக்குச் சிறை. நான் சிறையிலிருக்க வேண்டியவனுகிவிட்டேன். இனி உன்னை எப்போது பார்க்கப்போகிறேன் ?

இளமையோடு செல்கின்ற நான் விடுதலைபெறும்போது என்னுடைய உருவம் எப்படி இருக்குமென்று என்னுல் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை செல்வமே ! மதிப்பிற்குரிய என் தாய் தந்தையர், மகன் படிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் நகைகளை விற்று, நல்ல கழனிகளை கிரயமாக்கி, நெற்றிக்குத் திலகமிட்டு வெளியூருக்கு அனுப்பினுர்கள். படித்தேன்; படிப்பை எதிர்கால அரசாங்க உத்தியோகத்திற்கு முலதனம் என்று எண்ணுமல் படித்ததைச் சிந்தித்து பார்த்தேன். அதன் விளைவு-என்னுடைய வாழ்க்கைப் பாதை எங்கெங்கோ வளைந்து எங்கெங்கோ நெளிந்து அரசியலில் சங்கமமாகிவிட்டது. என்னுடைய எதிர்காலம் பயங்கரமான அரசியலில் சிக்கி அவதியுறுமென்று நான் அறிந்திருந்தால் உன்னை நேசித்திருக்கமாட்டேன். என் நெஞ்சில் உனக்கு ஒரு பளிங்கு அறையை விட்டுக் கொடுத்திருக்கமாட்டேன்.

படிப்பு முடிந்ததும் துடிப்புள்ள இளமைப் பருவத்தை - தூய்மையுள்ள இல்லறத்திற்கு நுழைவு வாயிலாக்கி வாழ்வைத்துவங்கலாம் என்று எண்ணியிருந்தேன். அந்த எண்ணங்களெல்லாம் மண்மூடிப் போய்விட்டன. எத்தனை எத்தனை இன்பக்கனவுகள் உன் இதயத்தைக் கவ்விக்கொண்டிருந்தன என்று நான் அறிவேன். அத்தானேடு வாழலாம் என்று எண்ணி ஏங்கியிருந்தாய். காதலித்த காதலன் கிட்டிவிட்டால் வாழ்வு கெட்டிப்படும் என்று எண்ணிக்கிடந்தாய். அய்யகோ ! உன் ஆசை எரிந்தது. நம் நேசம் முறிந்தது; பாசம் அறுந்தது. இப்போது நீ எங்கே ? நான் எங்கே ? அலைமோதும் கடலோரத்தில் அவதியுறும் படகில் துடுப்பின்றித் தவிக்கிருய். கரையிலே நீந்தத் தெரியாத நான், நின்றுகொண்டு, "செல்வமே ! செல்வமே !" என்று புலம்பிக்கொண்டிருக்கிறேன். என்ன செய்யமுடியும்? உன்னைப் பறக்கவிடுவதற்குத் துடித்துக்கொண்டிருந்த உன் பெற்ருேர்களுக்கு நேரம் கிடைத்துவிட்டது. ஐந்தாண்டு காலம் அடைபட்டுக் கிடந்த வெள்ளைப்புருவை- தூய்மையுள்ள தும்பைப்பூ நிறமுள்ள பட்சியை-பறக்க விடுவதற்கு ஆயத்தம் தேடிவிட்டார்கள். கூர்மையுள்ள உன்னுடைய மூக்கு, ரத்தம் போல் சிவந்திருக்கிறதென்பதை என்னுல் புரிந்துக்கொள்ள முடிகிறது. ஆற்றுமணல் பரப்பில் ஊர்ந்து செல்லும் பட்டுப்பூச்சிகளெனப் பெண்களை மதித்துவிடுகிருர்கள். தன்னுடைய பெண் தங்கநிகர் வாழ்வு நடத்தவேண்டுமென்று பிரியப்படும் பெற்ருேர்கள் அந்தப் பெண்ணின் மனப்போக்குப்படி விட்டுவிடுவதில்லை. எங்கோ, எப்படியோ ஒரு மாடிவீட்டில் நமது மகள் வாழ்ந்தால் போதும் என்று எண்ணி விடுகிருர்கள். அந்த எண்ணத்திற்குப் பழியானவள் நீ. 'அழகான பெண்ணுதான்-அதற்கேற்ற கண்ணுதான்' என்று உன்னைப் பற்றி பேசிப் பேசி உன் வாழ்வை அரித்துத் தின்றுவிட்டார்கள். குலப்பெருமை என்ற போலிப் பவிசு உன்னுடைய அழகான உருவத்தை உருக்கி உன்னை எலும்புக்கூடாக்கிவிட்டது. அன்ருருநாள் உன்னை சித்திரைத் திருவிழாவிலே கண்டேன். அப்போதிருந்த உன்னுடைய மேனியின் மெருகெங்கே ? இப்போதிருக்கின்ற உன்னுடைய சாம்பல் பூத்த சரீரம் எங்கே? தத்துவஞானிகள் 'இதயம் இதயம்' என்று புலம்பிக்கொண்டிருப்பதும், மனித மனம் பற்றி உலக அறிஞர்கள் ஆராய்ச்சி நடத்துவதும் எவ்வளவு முக்கியம் என்று இப்பொழுது புரிகிறது. உன் உள்ளத்திற்கு ஏற்பட்ட ஏமாற்றம்-உன் ஆசையிலே வைக்கப் பட்ட பெருங் கொல்லி உன் அகத்தையும் புறத்தையும் அல்லவா அலங்கோலம் செய்துவிட்டது ! காதல் ஒரு சிலருக்குத்தான் இதய ஜோதியாகிறது. மிகப் பலர் அந்த அக்கினிக் குழம்பிலே வெந்து சாம்பலாகிவிடுகிருர்கள். அதற்கு என்மீது பழியைச் சுமத்துவது, என்னுல் தாங்கமுடியாத சுமை செல்வமே! உன்னை எண்ணி எண்ணி நெஞ்சுருகிக் கிடந்த அந்த நாட்களிலே, நீ இரும்புத்திரைக்குப் பின்னுல் அடைபட்டுக் கிடந்தாய். உன்னுடைய நீண்ட கூந்தலையாவது பார்க்கலாம், அதிலே அடுக்கடுக்காக வைத்துப் பின்னப்பட்டிருந்த தாழம்பூவின் நறுமணத்தையாவது நுகரலாமென்று, நீ கொலுவிற்றிருந்த கண்ணுடி மாளிகையை எத்தனை இரவுகள் வலம் வந்திருக்கிறேன்? 'காந்தச்சிலை, கவினூறும் சாந்தஸ்வ ரூபினி' என்றெல்லாம் உன்னைப் பற்றிக் கவிதீட்டி மகிழ்ந்தவன். நான் இப்போது, அந்த இன்ப நினைவுகளையெல்லாம் மறந்துவிட்டு, நீ எனக்கு கிடைக்கமாட்டாய் என்ற ஏமாற்ற உள்ளத்தோடு பொதுத்தொண்டில் முனைந்துவிட்டேன். என்னுடைய வாழ்க்கை, நான் அறியாமல் செய்யும் சிறு தவறுகளையும் பெரிதாக்கி ஊர்மன்றத்திற்குக் கொண்டு வந்து பிரபல்யப்படுத்துகிற அளவுக்கு விரிந்துவிட்டது. சின்னவன்- என்ன தெரியும் இவனுக்கு ? என்று அலட்சியப்படுத்திய பெரிய மனிதர்கள் இப்போது, நான் ஊரில் நடமாடுவதையே ஒரு பிரச்சினையாக்கிவிட்டார்கள். என்னை ஊக்குவித்த, நான் வளர்க்க வேண்டுமென்று ஆசைப்பட்ட-என் கொள்கைகளுக்கு உயிர் தந்த என் உற்ற நண்பர்களின் சக்தி என்னுடைய சிறிய உருவத்தை அந்தப் பெரிய மனிதர்களுக்குப் பிரம்மாண்டமாக்கிவிட்டது. மகிழ்ச்சியடைந்தேன். ஏன்? புகழ் கிடைத்துவிட்டது என்பதற்காக அல்ல ! புறமெல்லாம் வரவேற்பு இருக்கிறது என்பதற்காகவும் அல்ல ! என்னை ஏளனமாகக் கருதிய உன் பெற்ருேர்கள் இப்போதாவது மதிக்கிருர்களே என்பதற்காகத்தான். எப்படிப்பட்ட சாதகமும் பாதகமும் காலம் கடந்து வருமானுல் அது சக்தியை இழந்துவிடுகிறது. நண்பனுக்குச் செய்யவேண்டிய உதவியும் காலத்தோடு செய்யவேண்டும். பகைவனுக்கு இழைக்கவேண்டிய தீங்கும் சமயத்தில் இளம்ப வேண்டும்.

உன் பெற்ருேர்கள் என்னை மதித்தார்கள், எப்போது ?

உன் பெற்ருேர்கள் என்னை விரும்பினுர்கள். எப்போது?

உன்னுடைய அழகான உருவம் - எழிலோவியம் களங்கமில்லாத என் இதயத் திரையிலிருந்து அழிக்கப்பட்ட பிறகு- தங்கத்தகட்டில் வைர ஊசியால் வரையப்பட்ட மின்னல்கீற்றுகளுக்கிடையே ஒளிந்துகிடந்த மாய உருவம் ஏக்கத்தால் தகடோடு தேய்ந்துவிட்ட பிறகு!

அழகான வட்ட நிலவைப் பார்க்க முடியவில்லையே என்று துன்புற்றுக்கொண்டிருக்கும் வேளையில் உன்னுடைய துயரமுடங்கல் கிடைக்கப் பெற்றேன். சர்க்கார் அதிகாரிகளின் தொல்லை, சுற்றியுள்ள மாற்றுக் கட்சிக்காரர்களின் இடையூறுகளைக் காட்டிலும் உன்னுடைய கடிதம் என்னுடைய உள்ளத்தை அணு அணுவாகத் துளைத்தது.

"உங்களைவிட்டுப் பிரியப் போகிறேன் அத்தான்.

பருவப்பெண்-பக்குவமுள்ள வயதினள் - அதிக நாள் அன்னை வீட்டில் இருத்தலாகாது என்று எண்ணிய என்னுடைய கவரிமான் தாய், எப்படியாவது, யாரிடமாவது, என்னை ஒப்படைத்துவிட வேண்டுமென்ற அவசரத்தில், நான் யாருக்கோ மனைவியாகப் போகிறேன். புகழ்பெற்ற அத்தானின் பாரியாளாக வேண்டிய வாய்ப்பை இழந்துவிட்டேன். போகப் போகிறேன். பொல்லாத உள்ளத்தினர் நம்மிடையே எழுப்பிய கற்கோட்டை சாஸ்வதமாகிவிட்டது. நீங்கள் சிறையிலே இருக்கிறீர்கள். நான் சிறைச்சாலைக்குப் போகப்போகிறேன். உங்களிடம் விடைகேட்டு நிற்கிறேன். அனுப்பி வைக்கமாட்டீர்களா ? என்னுடைய அருமை அன்னையின் வேண்டுகோளுக்கிணங்கி திருமண ஏற்பாட்டுக்கு ஒப்புக்கொண்டு விட்டேன். நீங்கள்தான் என்னை ஒதுக்கித் தள்ளிவிட்டீர்களே ! விடைபெற்றுக்கொள்கிறேன். உங்களுடைய அருமைத் தம்பிக்கு நல்ல வேலையாக பார்த்து வாங்கிக் கொடுங்கள். உங்களால் புறக்கணிக்கப்பட்ட பரிதாபத்திற்குரிய பெண் வேண்டிக் கேட்டுக்கொள்கிருள். தயவுசெய்து நீங்கள் சிகரெட் பிடிக்காதீர்கள். இது எனது இறுதி வேண்டுகோள் - இறுதிக் கடிதம் ! கண்ணீரோடு பிரிகிறேன். நமது காதல் விளையாட்டுக்கள் என் மனக்கண் முன் வந்து நிற்கின்றன. போய் வருகிறேன். உங்களுடைய புகழையும் செல்வாக்கையும் எப்படியாவது தினசரி தெரிந்துகொள்ள முடியுமென்ற நம்பிக்கை உண்டு அத்தான். மறக்கமாட்டேன்-மறந்துவிடாதீர்கள். நான் தந்த பித்தளை மோதிரத்தைப் பத்திரப்படுத்தி வையுங்கள். நீங்கள் வாங்கித் தந்த பொருள்கள் என்னிடம் சாகாவரம் பெற்றவையாக இருக்கும்."

செல்வம்! இதைக் கடிதம் என்ருசொல்கிருய் ! எலும்பையும் குடைந்துவிடக் கூடிய கூர்வேல் இது. மறக்கமாட்டேன் என்றுஎழுதியிருக்கிருய். ஆனுல், அதே கடிதத்தில் சாகப்போகிறவனைப்போல சஞ்சலப்பட்டு விடை தாருங்கள் அத்தான் என்கிருய். இதை நான் எப்படி தாங்கிக்கொள்வது ? முடியவில்லையே என்னுல் ! இன்னெருவருக்கு நீ இல்லக்கிழத்தியாகப் போகிருய். உள்ளத்து நாயகன் காராகிரகத்திலே கையிலே விலங்கு பூட்டப்பட்டு கடும்புலிபோல் உலாத்திக் கொண்டிருக்கிறேன். நான் வெளியே வருகின்றபோது நான் உன்னை எந்தக் கோலத்தில் பார்க்கப்போகிறேன் ! என்னிடம் இருதயமிருக்கிறது. நான் உன்னுடைய ஆசையை நிறைவேற்ற முடியாவிட்டாலும் உனக்கு வாழ்த்துக் கூறியனுப்பி வைக்கிறேன். நீ இல்லற ஜோதியாக ஒளிவீச வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். உனது சுவையூறும் பொற்கரத்தால் சமைத்துச் சாப்பிட வேண்டுமென்று துடித்துக்கொண்டிருந்த நான், எப்போதாவது ஒரு நாளைக்கு உன்னுடைய இல்லத்திற்கு கள்ளமில்லாத விருந்தாளியாக வருவேன் என்ற நம்பிக்கையில் எனது இதயப்பூர்வமான வாழ்த்துக்களைக் கூறி உன்னை அனுப்பிவைக்கிறேன்.

வாழ்வைத் துவங்கு! கணவனிடத்தில் பாசமாக நடந்துகொள். நான்தான் அவரென்று எண்ணிக்கொள்! உன்னுடைய மாசற்ற திருமேனியை இருக்கின்ற வரையிலே அந்த உத்தம மணவாளனுக்குக் காணிக்கையாக்கிவிடு. இது அத்தானின் இறுதி உபதேசம். எக்காலமும் அணையாத தீபச்சுடரே நீ வாழ்க ! உன் வாழ்வு வளம் பெறுக ! இனி எப்போதாவது உன்னைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்குமானுல், உன்னிடம் எப்படிப் பேசுவது, பழகுவது என்ற ஆராய்ச்சியிலேயே இந்தச் சிறை வாழ்வைக் கழிப்பதென முடிவு செய்துவிட்டேன்.

உன்னுடைய திருமண நாள் எனக்கு நினைவிருக்கிறது. அந்த நாளில் உன்னுடைய வைதிகப் பெற்ருேர்கள் குறிப்பிட்டிருக்கும் முகூர்த்த வேளையில் இரும்புக்கம்பிகளுக்கப்பாலிருந்து பெருமூச்சோடு உனக்கு வாழ்த்துக் கூறுவேன். அந்த வாழ்த்தொலி மேகமண்டலத்திற்குப் போய் மெல்லத் தவழ்ந்து, மென்காற்றில் மிதந்து உனது மணவிழா மண்டபம் வந்து சேரும். அங்கு வைக்கப்படவிருக்கும் வெள்ளிப் பன்னீர்ச் செம்பு, பவளத்தில் செதுக்கப்பட்ட குங்குமச் சிமிழ், சந்தனக் கிண்ணம், அத்தனையிலும் என் வாழ்த்து மணக்கும். நாதசுரக்காரர் வாசிக்கும் நலுங்கில் எனது நல்வாழ்த்துக்கள்பின்னிக்கொண்டு ஓடிவரும். கவனமாகக் கேள்.

நாளை இந்நேரம் இந்த ஓலையைப் பிரித்துப் பார்ப்பாய். இது வாழ்த்து மடலாக இருப்பதுகண்டு, உன் அன்பிற்குரிய உயர்ந்த பண்புள்ள - உயிருக்குயிராக உன்னுல் நேசிக்கப்பட்ட - அத்தானின் கடிதமென்று தெரிந்துகொள்வாய். நம்முடைய தொடர்பு பிற்காலத்தில் என்னுடைய கரத்தாலேயே புரட்சி இலக்கியமாகச் சமைக்கப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொண்டு திடமான உள்ளத்தோடு 'சென்று வா செல்வமே அங்கு போய் நன்று வாழ்க' என்று மீண்டும் வாழ்த்துக் கூறி முடிக்கிறேன்.

★ தீர்மானமும் திக்குழம்பும்! ★

முப்பதாண்டு காலமாக சமுதாய மறுமலர்ச்சிக்கும் அரசியல் விழிப் புணர்ச்சிக்கும் அரும்பாடுபட்டு வரும் சுயமரியாதை இயக்கத்தின் ஒரு அங்கமாக இருந்துவரும் திராவிட முன்னேற்றக் கழகம் தேர் தலிலே நிற்பதென்று முடிவெடுத் திருக்கிறது. திருச்சியிலே கூடிய மாநில மாநாட்டில் தி. மு. கழகம் தேர்தலிலே நிற்கவேண்டுமென்ற தீர்மானம் மகிழ்ச்சிப் பெருக்கில் ஆரவாரத்திற்கிடையே நிறைவேற் றப்பட்டது. நாம் அந்தத் தீர் மானத்தை, மாநாட்டில் நிறை வேற்றப்பட்ட முப்பத்திமூன்று தீர் மானங்களில் அதுவும் ஒன்றுஎன்ற அளவிலேதான் கருதினேம், கருது கிறேம். ஆனல் அந்தத் தீர்மானம் எதிர்க்கட்சிகளை எவ்வளவு கலங்க வைத்திருக்கிறது என்பதைக் கடந்த வாரச் செய்தித்தாள்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. நாம், மே மாதம் 20 ம் தேதி இரவு ஏழு மணிக்கு அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி னேம். 23-ம் தேதி அந்தத் தீர் மானம் டெல்லிப் பாராளு மன்றத் திலே எதிரொலித்திருக்கிறது. டாக் டர் சுப்பராயன், நாம் தேர்தலிலே குதிப்பது அவர்களுக்கு ஆபத்து என்ற கருத்தை உள்ளடக்கி டில்லி யிலே பேசியிருக்கிருர். நாம் ஜாதிவெறி பிடித்தவர்களாம்; வகுப் புத் துவேசிகளாம். ஆகவே நாம் தேர்தலிலே நிற்கக்கூடாதாம். இப்படிப் பேசியிருக்கிருர் கோயம் புத்தூர் சீமான். யார் அந்த சுப்ப ராயன்? நம்மீது ஏன் அவருக்கு இவ்வளவு கோபம்? தான் சார்ந் திருக்கின்ற கட்சியிலும், தமிழ் நாட்டிலும் தனக்கு அதிகமான செல்வாக்கு இருக்கிறதென்று தவருக மதிப்பிட்டுக் கொண்டு அடாத செயல்புரிந்து தன்னைத் தானே குறைத்துக்கொண்டவர் களில் மிக முக்கியமானவர் சுப்ப ராயன். அண்ணவைப் பக்கத்திலே வைத்துக்கொண்டு அவர் தன் முகத்திலே பலமுறை கரி பூசிக் கொண்டிருக்கிருர். அதிலே மிக முக்கியமான சம்பவம், கோவை விஞ்ஞானி ஜி. டி. நாயுடு அவர்கள் தனனுடைய பொருள்களுக்கு சர்க்கார் விதிக்கும் வரியைக் கண் டித்து நடத்திய கண்டனக் கூட்டம் ஆகும். அதில் பெரியார் ராமசாமி அவர்கள் தலைமையில் சுப்பராயன் உள்ளிட்ட அத்தனை தமிழ்நாட்டுத் தலைவர்களும் கலந்துகொண்டார் கள். சர்க்கார் விதிக்கும் வரியைக் கண்டிப்பதற்காக ஜி. டி. நாயுடு அவர்கள் தயாரித்த உன்னதமான பொருள்களை உடைக்க வேண்டு மென்று அறிஞர் அண்ணு உள்பட ஒரு சிலரும், உடைக்கக்கூடாது என்று சுப்பராயன் உள்பட ஒரு சிலரும் பேசினர்கள். முன்னது வென்றது; நாயுடு அவர்கள் தயாரித்த பொருள்கள் தவிடுபொடி யாயின அதே மேடையில். அப் போதுதான் தமிழகத்து மக்கள் சக்திக்கு முன்பாக டாக்டர் சுப்பராயன் முகத்திலே கெட்டி யாகக் கரி பூசப்பட்டது. அந்த ஆத்திரம் இன்னும் அடங்கி யிருக்காது சுப்பராயனுக்கு. அதனுடைய எதிரொலிதானே என்னவோ அவருடைய டில்லிப் பேச்சு! இல்லாவிட்டால் திடீ ரென்று நம்மீது அவருக்கு ஏன் இவ்வளவு சீற்றம்? ஒன்று தனது தொகுதியிலே தனக்கு ஆபத்து என்ற நிலை பிறந்திருக்கவேண்டும், அல்லது பழி தீர்த்துக்கொள்ள முயன்றிருக்கவேண்டும். ஜாதியை ஒழிக்க அரும்பாடு பட்டுக்கொண் டிருப்பவர்கள்,ஏராளமான கலப்புத் திருமணங்களைச் செய்துவைப்பவர் கள், சுயமரியாதைத் திருமணங் களுக்கு சர்க்கார் அதிகாரமளிக்க வேண்டுமென்று வாதிட்டுக்கொண் டிருப்பவர்கள் நாம்தான் என்பதை சுப்பராயன் நன்கு அறிவார். நமது கடந்தகால வரலாறு அவருக்கு மனப்பாடம். சுயமரியாதைக் கட்சி யின் பெருந்தொண்டைக் கண் களிலே ஒத்திக்கொண்டவர்களில் அவரும் ஒருவர்.

★

சுப்பராயன்தான் துள்ளிக்குதித்து இறுதியிலே எள்ளி நகையாடப் பட்டுவிட்டார் என்ருல், காமராசர் அதற்குமேல் போய்விட்டார்.மாநில மாநாட்டுக்கு முன்பெல்லாம் அவர் பேசிய வீரமொழிக்கும், இன்றைய அவருடைய முகாரிக்கும் உள்ள இடைவெளியைப் பார்த்தால் காங் கிரஸ் இயக்கம் புரையோடிப் போய் தீராத நோய் கண்டிருப்பது புலனு கிறது. மே மாதத்திற்கு முன்பு,

தேர்தலிலே நிற்கட்டும் பார்ப் போம்!

தைரியமிருந்தால் பொதுத் தேர்தலில் கலந்துகொள்ளட்டும்.

நாள் குறிப்பிடப்பட்டு விட்டது போல காமராசர் தேர்தல் பிரச் சாரத்திலே இறங்கிவிட்டார்.

இவர்களுக்கு யார் ஓட்டுப் போடு வார்கள்?

திருவரங்கம் கோயிலுக்குள் செருப்போடு நுழைந்தார்கள்.

மாநாட்டுப் பந்தலிலே சீட்டுப் போட்டார்கள்.

நாடகமாடிகள் நாடாள்வதா?

—என்றெல்லாம் தான் வகிக் கின்ற பொறுப்புள்ள பதவியையும் மறந்துவிட்டு ஏதேதோ பேசிக் கொண்டு வருகிருர். காமராசரின் இந்த ஆவேசப் பேச்சு தி. மு. கழகத்தின் சக்தியை வெளிப் படுத்திவிட்டது. 'காமராசர் துடிப் பதிலிருந்து கழகத்திற்குச் சக்தி அதிகம் என்பது தெரியவருகிறது' என்று பலரும் பேசிக்கொள்வது நம் காதில் விழுகிறது.

★

அதிகாரம் படைத்தவர்கள்தான் —இப்படித்தான் அறைகூவல் விடுத்தார் பிரதமர் காமராசர். மிரட்டுகிறவர்களை மருளச் செய்யும் சக்தி நம்மிடம்தான் உண்டு என் பதை அவர் அறியாதவராகையால் அவர் நம்மைப் பயமுறுத்திப் பார்த் தார். நாட்கள் நகர்ந்தன. 'நிற் கட்டும் பார்ப்போம்'—என்றவர், யார் இந்த அண்ணுதுரை? தி. மு. கழகத்தினிடம் என்ன திட்டமிருக் கிறது என்று கேட்கக்கூடிய அள வுக்கு இரண்டு படி கீழே இறங் கினர். கற்றேர் அறிந்த அண்ணு வை, காமராசர் அறிந்துகொள்ளா தது வியப்பில்லை என்று எண்ணி அலட்சியப்படுத்தினேம் அவரது பேச்சை வழக்கம்போல்! ஆனல், மாநில மாநாட்டுக்குப் பிறகு காம ராசரின் பேச்சு மிக மிக அடித்தளத் திற்குப் போய்விட்டது. தேர்தலுக்கு குதிக்கிருர்கள் என்ருல், அது இல்லாதவர்களும், அது பெறு வதற்கு எந்தவித மார்க்கமும் பெற்றிராதவர்களும் நம்மை மிரட் டிப் பார்க்கிருர்கள். இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி தங்களுக்கு ஏதாவது அபரிமிதமான செல் வாக்கு இருப்பதாக நினைத்துக் கொண்டு அண்மையிலே ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தார் கள். தி. மு. கழகம் திராவிட நாடு பிரிவினையை விட்டுவிட்டால் தேர்த லில் அவர்கள் நமக்கு ஒத்துழைப் பார்களாம். பொதுவுடமைக் கட்சிக் காரர்கள் தெரிவிக்கிருர்கள் இப்படி. அவர்களுடைய இந்த நிபந்தனைக்கு, நாம் ஒப்புக்கொள்ளமாட்டோம் என்பது அவர்களுக்கு நன்ருகத் தெரியும். அவர்கள் அவ்வாறு எண்ணியிருப்பார்களானல்,நம்மை வேறு விதமாகக் கேட்டுக்கொண் டிருப்பார்கள், "திராவிட முன் னேற்றக் கழகம் அதனுடைய பெயரை மாற்றிக்கொள்வதானல் நாங்கள் தேர்தலிலே அவர்களுக்கு ஒத்துழைப்போம்" என்று கூறி யிருப்பார்கள். ஏனென்றல் நமது கட்சியின் பெயரே 'திராவிட முன் னேற்றக் கழகம்'! கம்யூனிஸ்டுகள் சொல்லுவது 'திராவிடநாடு பிரி வினையை ஒதுக்கிவிட வேண்டு' மென்பது. கம்யூனிஸ்டுகளின் விண் ணப்பத்தைச் சுருக்கமாகச் சொல்வ தானல் அப்படித்தானே சொல்ல வேண்டும், தி. மு. கழகம் தலைப்பை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதுபோல! ஏன் அவர்கள் அப்படிக் கூறவில்லை? பலம் பெற் றிருக்கும் தி. மு. கழகம் தேர்தலிலே நிற்பதென முடிவுகட்டியது கண்டு தங்களுடைய அன்பிற்குரிய காங் கிரஸ் கலங்கிடக்கூடும்; இடது சாரிக் கட்சிகள் தி. மு. கழகத்திற்கு ஒத்துழைப்புத் தந்துவிட்டால் காங் கிரசின் நிலை கலக்கிடமாகிவிடும் என்று கலங்கித்தான், தாங்கள் தி. மு. க வை ஆதரிக்கமாட்டோம் என்பதைத் தங்களுடைய அபி மானத்திற்குரிய காங்கிரசிற்குத் தெரியப்படுத்தும் வகையில் அப்படி ஒரு நிபந்தனையை - தி. மு. க. என்றும் ஒத்துக்கொள்ள முடியாத ஒரு நிபந்தனையை நம்மிடம் நீட்டி யிருக்கக்கூடும். இப்போது என்ன ஆயிற்று? தி. மு. கழகத்திற்கு கம்யூனிஸ்டுகள் உதவிசெய்யமாட் டார்கள் என்பதை காங்கிரஸ் கட்சி நன்ருகப் புரிந்துகொண்டது. இதை டில்லி மேலிடத்திற்குத் தெரியவைக்கச் செய்ய 'பொது வுடமைக்காரர்களின் நாடகம்' தான் அவர்கள் விதித்த அந்த நிபந்தனை.

யார் எந்தக் கோணத்திலிருந்து எப்படிப் பேசினலும், மே 20-ம் தேதிய அந்தத் தீர்மானம் அகில இந்தியாவிலேயும் ஒரு பரபரப்பை உண்டாக்கிவிட்டது என்பது தெரி கிறது. தென்னுட்டுக் காங்கிரசின் இதயத்திற்கு மட்டும் நமது தீர் மானம் திக்குழம்பு கொட்டியது போலிருக்கிறது. அவர்களின் தேர் தல் பிரச்சாரம் ஆரம்பமாகி விட்டது. ★

ஆசிரியத் தோழருக்கு

"நடந்த 18-5-56 காலை 10 மணி யளவில், எங்கள் ஊரைச் சேர்ந்த தோழர்கள் பலரும், இயக்க நண்பர் கள் சிலரும் மொத்தம் ஐம்பது பேர் வரை சீரங்கம் கோயிலுக்குச் சென் றேம். கோயில் நுழைவு வாயிலில் இருந்த ஒருவர், 'செருப்பை இங்கே வைத்துவிட்டுப் போங்கள்.' என்றுர். எங்களில் சுமார் பதினைந்து பேர் செருப்பு அணிந்திருந்தார்கள்; அந்தனைபேரும் செருப்பை விட்டு விட்டுச் சென்றேம்.

"பின்னர், கோயிலைப் பார்த்துவிட்டுத் திரும்பி வரும்போது, உள் ளிருந்து இரண்டாவது கூடத்தில உள்ள சிற்பக்கலையைக் கண்டோம்; அங்குள்ள சிலைகள் ஆபாசமான நிலையில செதுக்கப்பட்டிருந்தன. அந்த இடத்தில் நம் தோழர்கள் தங்களுக்குள்ளாக சிலையைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். இதைக் கண்ணுற்ற பார்ப்பனப் பூசாரி யொருவர், வேகமாக வெளியில் சென்ருர். அவர் போலீசில் புகார் செய்வாரென எண்ணினேம். விரைவில் இரண்டு போலீசார் வந்து எங்களைப் பார்த்துவிட்டு யாரையும் விசாரிக்காமல், ஏதும் செய்யாமல் திரும்பிவிட்டனர்.

"இதுதான் நடந்த நிகழ்ச்சிகளாகும். கழகத் தோழர்கள் எவ் வித அசம்பாவிதத்திலும் ஈடுபடவில்லை. அன்றே நாங்கள் மலைக் கோட்டை சென்றேம்; அங்கும் கண்ணியத்துடனே நடந்துகொண் டோம்."

ஏ. இராமநாதன்,
கீழப்பாவூர்.

கண்ணதாசன்

27

இந்திரா தூங்கினாள். கமலம் அதைக் கண்டாள். அக்காள் எவ்வளவு நிம்மதியாகத் தூங்கு கிறாள்! அத்தானது பரிவு அவளை அவ்வளவு ஆனந்தத்தில் ஆழ்த்தி அமைதியைத் தந்து விட்டது போலும்! — என்று எண்ணி எண்ணி மகிழ்ந்தாள். அக்காள் சார்பில் அத்தானுக்கு நன்றி தெரிவிப்பவள் போல, கடைக்கண்ணால் பார்த்தாள்; புன்னகையை மலர வைத்தாள். ஆனால் அந்தப் பார்வைக்கும் புன்னகைக்கும் அவள் கொண் டிருந்த பொருளை, பாலன் ஏற்றுக்கொள்ளவில்லை. தனக் குத் தேவையான ஒரு பொருள், அதில் இருப்பதாக அவன் முடிவுகட்டிக் கொண்டான். "பெண் சிரித்தால் போச்சு; புகையிலை விரித்தால் போச்சு" என்பார்கள். களங்கமின்றி ஒரு பெண் ஒருவனைப் பார்த்துச் சிரித்தாலும் ஆடவனுக்கு அது காதல் விளம்பரமாகத்தான் தெரியும். முன்பின் அறிமுக மில்லாத இருவருக்கே இது இயற்கையென்றால், கமலத்தின் சிரிப்புக்கு பாலன்...?—ஆம்; அவன், கமலம் சம்மதித்துவிட்ட தாகவே கருதினான்.

தன் "கிருஷ்ண் மனோபாவ"த் தைத் திரையிடத் துவங்கினான். "நான் இன்னும் சாப்பிட வில்லை!" என்றான் கமலத்திடம். "இதோ!" என்று ஓட்டமாக ஓடி சோறு, குழம்பு முதலிய வற்றை அடுப்பிலிருந்து இறக்கி, வட்டிலில் எடுத்து வைத்தாள் கமலம். எல்லாவற்றையும் சரி யாக வைத்துவிட்டு, "சாப்பிட வாருங்கள்!" என்று மெல்லிய குரலில் அழைத்தாள். பால னுக்கு அது இன்பநாதமாக ஒலித்தது. கமலம், தன் மனை வியின் இடத்திலிருந்து அழைப்ப தாகத் தோன்றிற்று அவனுக்கு. சாப்பிட உட்கார்ந்தான். சோறு செல்லும்?—கமலம், அன்போடு பறிமாறினாள்; பாலன் கடமைக் காகச் சாப்பிட்டான். அவள் ஊறுகாய் எடுத்து வைக்கும் போது, காயைத் தொடாமல் கையைத் தொட்டான். 'வேடிக் கைக்காக' என்றெண்ணி, அவள் களங்கமில்லாமல் சிரித்தாள். "விபரீத வேள[illegible]... காண[illegible]... அவ[illegible] அவளைப்[illegible]... தான் [illegible] சப்பாத[illegible] [illegible]த்தது. கை[illegible]

எடுத்துத் தந்தாள் கமலம். கழுவினான்.

"நீ சீக்கிரம் சாப்பிடு!" என்றான்.

"உம்..." என்று அந்தச் சிலை தலையசைத்தது.

பாலன், தன் அறையில் வந்து அமர்ந்தான். இன்ப நினைவுகள் அவனை இழுத்தன. இந்திராவை எட்டிப் பார்த்தான். "உலகம் மிகவும் யோக்கியமானது" என்று நம்புபவள்போல அவள் நிம்மதியாகத் தூங்கிக்கொண் டிருந்தாள். தன் தூக்க மருந்து நன்கு வேலை செய்வதை உணர்ந்த பாலன், தனக்கும் கமலத்துக்குமிடையே அந்த இரவு யாரும் தடைக்கல்லாக நிற்கமாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டான். கமலம் சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு வரமாட்டாளா என்பதுதான் இப்போது அவன் கவலையாக இருந்தது.

கமலம் சாப்பாட்டை முடித் துக்கொண்டு, எல்லாவற்றையும் எடுத்து ஒழுங்குபடுத்தி வைத்து விட்டு வந்தாள். கண் துயிலும் அக்காளின் அருகிலே சற்று நின்றாள். போர்வையை எடுத் துப் போர்த்திவிட்டாள். அந்தக் கரிய முகத்தில், பெருநோயின் வடுக்கள் பளபளவென மின்னு வதைக் கமலம் கண்டாள். அவளை அறியாமல் கண்ணீர் புறப்பட்டது.

"பெண்ணென்று பூமிதனில்
பிறந்துவிட்டால்-மிகப்
பீழை யிருக்குதடி
தங்கமே தங்கம்"

—என்று வீதியில் யாரோ பாடிக் கொண்டு செல்லும் சத்தம் கமலத்துக்குக் கேட்டது. அவள் நினைவு விளக்கங்களோடு பறந்தது.

பெண்!—அந்தப் பிறப்பே பீழையுடையது என்பது சமு தாய நடைமுறை வகுத்து வைத் திருக்கும் விதி. ஆண், பெண் சமத்துவம் என்பதெல்லாம் ஏட்டில் எழுதிப் பார்க்கவும், மேடையில் பேசித் தீர்க்கவும் அழகாயிருக்கலாம். நடைமுறை, பெண்மையின் பரிதாபத் தன்மையை விளக்குகிறது. எடு பிடி வேலை[illegible], சிற்றின்பத் திற்கும் [illegible] நல்ல[illegible] [illegible] என்று தான் [illegible] உலகம் கணக்கிடுகிறது. பெண்கள் [illegible] என்று [illegible] ஆடவர்கள் [illegible]

தருகிறது; மனிதன் மல ருக்கு என்ன தருகிறான்?- தன்னைத் திருப்தி செய்தும், அதே நேரத்தில் தன்னிடமிருந்து ஒன்றையும் எதிர்பாராமலும் இருக்கும் பொருள்களைத்தான் மனிதன் பெண்ணுக்கு உவமிக் கிறான். இது அவன் திட்டமிட்டுச் செய்வதல்ல. இருதய உண்மை! — அவனையறியாமல் வெளி வருகிறது!

கமலம், வெகுநேரம் சிந்திப்ப தற்கு வழியில்லாமல், பாலனின் குரல் அவளை அழைத்தது. கமலம், அத்தானின் அழைப் பைப்பற்றிச் சிறிது சந்தேகப் பட்டாள். என்றாலும், அதைக் காட்டிக்கொள்ளாமல், மெது வாக, அவனது அறைக்கு வந் தாள். கதவோடு கதவாக நின்றாள். பாலன் கண்டான்.

"உள்ளே வா!" என்றான்.

அவள் பயந்தபடி உள்ளே சென்றாள்

"உட்கார்!" என்றான்.

"இல்லை. சும்மா நிற்கிறேன்" என்றாள்.

"அடே! உட்கார் என் கிறேன்!" என்றான் அன்பான அதிகாரத்தோடு.

அவள் சற்றுத் தூரத்தில் அமர்ந்தாள்.

பாலன் மெதுவாக அவள் கையைப் பிடித்தான்.

"வேண்டாம்! உஸ்.....அக் காள் விழித்துக் கொள்வாள்! உஸ்...கொஞ்சம் பொறுங்கள்... உங்களைக் கும்பிடுகிறேன். திரு மணம் ஆகட்டும். ஐயையோ! இதென்ன பிடிவாதம்!..." என்று திமிறினாள்.

பாலன் விடவில்லை.

எருமையின் குளம்புக்கிடையே, தாமரை எவ்வளவு நேரம் போராட முடியும்? கழுதை யின் வாயில் வீழ்ந்த காகி தம் என்ன செய்ய இயலும்? துடித்த கமலம் துவண்டாள். போராடிய மாது பூவானாள்.

பருவத்தின் உணர்ச்சிகளும் சேர்ந்து, அவளைப்பாழ்படுத்தின.

இனி, பாலனைத் தவிர யாரும் கமலத்தை மணக்கமுடியாது!

கமலம் அழுதுவிடுவாள் போல இருந்தது. பாலன் சமா தானம் சொல்லத் துவங்கினான். தன் [illegible] முழுவதையும் சொரிந்தான். கற்பனைகளை அடுக்கினான். அவ[illegible] [illegible] தானப்படுத்தினான் [illegible] பிறகு [illegible] அவள் [illegible]

கிடையே இருந்தாள். பொழுது விடியும் தருணத்தில் தான் அந்தப் பூங்கொடி, களைப்போடு தன் படுக்கைக்குச் சென்று கண்ணயர்ந்தது

காலை மணி எட்டு இருக்கும். நன்கு தூங்கிக் கொண்டிருந்த கமலத்தின் முதுகில் 'படா' ரென ஒரு அடி விழுந்தது. திடுக்கிட்டு எழுந்த கமலம், அங்கே இந்திரா தலைவிரிகோல மாக நிற்பதைக் கண்டாள்.

"என்னடி தங்காய்! ஏன் துயில்கின்றாய்?" என்று இந்திரா பாட ஆரம்பித்தாள். கமலம் செத்துப் பிழைத்தாள்.

என்ன நடந்தது? இந்திரா ஏன் இப்படி ஆனாள்? இரவு நடந்ததைக் கண்டுவிட்டாளா?

கமலம் வாய் புதைத்து ஒரு மூலையில் ஒதுங்கினாள். இந் திரா, "மாமூல் பைத்திய"ங்கள் போல ஆடிப் பாடவில்லை. படுக் கையில் உட்கார்ந்து சிரிக்க ஆரம்பித்தாள்.

அந்தச் சிரிப்பு!—அது அன்று முழுவதும் நிற்கவே இல்லை.

அக்காளுக்குச் சித்தப்பிரமை என்பதைக் கண்டுகொண்ட கமலம், அலறி அழுதாள். அதிர்ச்சி அடைந்த பாலன், வீட்டை விட்டுக் காலை பத்து மணிக்கெல்லாம் வெளியேறி விட்டான். அன்று முழுவதும் சமையல் இல்லை. கமலமும் இந்திராவும் ஒரு கவளங்கூட உண்ணவில்லை.

கண்ணீர், கமலத்தின் முழு நேர வேலையாயிற்று.

மறுநாள் தான் அண்ணனுக் குக் கடிதம் எழுதினாள், கமலம்.

அதிலிருந்து மூன்றாவது நாள் மாலை சுமார் ஆறு மணியிருக் கும். சுந்தரமும சாரதையும் ஒரு காரிலே வந்து இறங்கி னார்கள். "அண்ணா!" என்று அலறினாள் கமலம். அலட்சிய மாகப் பார்த்து, "வாய்யா! சௌக்கியமா?" என்று கேட்டு விட்டுச் சிரித்தாள், இந்திரா.

சுந்தரமும் சாரதையும் வெறிச் சிட்டுப் போன அவளது முகத் தையும், தன் நிலைவற்றிருப்பதை யும் கண்டு துவண்டார்கள். இதில் எதையும் காணப் பாலன் அங்கு இல்லை. சிறிதுநேரங் கழித்து, "என்ன நடந்தது?" [illegible] கமலத்தைப் [illegible] [illegible] இல்லை [illegible]

சொன்னாள் கமலம். வேறு எதை அவள் வாய் விட்டுச் சொல்ல முடியும்?

''யார் பார்க்கிறார்கள்?'' என்று கேட்டான், சுந்தரம்.

வைத்தியர் பெயரைச் சொன்னாள், கமலம்.

சாரதை கண்கலங்கி நின்றாள், இந்திராவைப் பார்த்தபடி. சுந்தரம், தனக்குத் தெரிந்த ஒரு வைத்தியரின் முகவரியை நினைவுபடுத்திக் கொண்டு, அவரைப் பார்ப்பதற்காக வீட்டை விட்டுப் புறப்பட்டான். இரவு பதினொரு மணிக்கு, சென்னையிலேயே பிரபலமான ஒரு வைத்தியரைக் கையோடு அழைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தான்.

இந்திரா தொடர்பில்லாமல் பாடிக்கொண்டிருந்தாள். அவள் அமர்ந்திருந்த கட்டிலில் கை வைத்தபடி தரையில் உட்கார்ந்திருந்தாள், சாரதை. கமலம், அடுப்பங்கரையில் இருந்தாள். வைத்தியரைக் கண்டதும் சாரதை எழுந்து ஒதுங்கி நின்றாள். வைத்தியர், இந்திராவின் அருகில் வந்தார். இந்திரா அவரைப் பார்த்துச் சிரித்தாள்.

''ஐயா சாப்பிட்டாச்சோ?'' என்று. அங்கசேட்டைகளோடு கேட்டாள். வைத்தியர் பதில் சொல்லாமல் அவளைச் சோதிக்கத் துவங்கினார். அவளை, நாக்கைத் திறக்கச் சொன்னார். படாரென அவரை அறைந்தாள், இந்திரா! வைத்தியர் வருந்தவில்லை.

வைத்தியக்காரர்களின் தாக்குதல் இப்படித்தான் இருக்கும். அதற்குத் தனி முக்கியத்துவம் இல்லை என்பது அவருக்குத் தெரியும்.

வைத்தியர் பலவந்தமாக அவளது வாய்க்குள் ஒரு மருந்தைத் தடவினார். சிறிது நேரத்தில் இந்திரா குமட்டிக் குமட்டி வாந்தி எடுத்தாள். வைத்தியர் அந்த வாந்தியை ஒரு பாத்திரத்தில் பிடித்துக்கொண்டார். பிறகு இருதயத்தைப் பரிசோதித்தார். குழப்பத்தோடு தலையை ஆட்டினார். சுந்தரமும் சாரதையும்அவரையே கவனித்தபடி அமைதியாக நின்றார்கள். கமலம், ஒரு கதவருகில் நின்றபடி இதனைக் கவனித்தாள். வைத்தியர் பிறகு வாந்தியைப் பரிசோதித்தார். தீர்மானத்தோடு தலையை ஆட்டினார். ஆம்; அவர் நோயின் காரணத்தைக் கண்டுபிடித்து விட்டார்!

''இது செயற்கை விளைவு தான்'' என்றார்.

''என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டான், சுந்தரம்.

''ஊமத்தை விதை சாப்பிட்டிருக்கிறாள்'' என்றார் வைத்தியர்.

சுந்தரம் திடுக்கிட்டான்.

''நல்லவேளை. விதை அளவில் அதிகமில்லை. அதனால் தான் சாவிலிருந்து தப்பியிருக்கிறாள்'' என்று தன் திருப்தியைத் தெரிவித்தார் வைத்தியர். அதோடு 'ஊசி போட்டால் தீர்ந்து விடும். என்றாலும் நாலைந்து' மாதங்கள் ஆகும். அதுவரை எச்சரிக்கையாகக் கவனித்து வாருங்கள்'' என்றும் சொல்லி, ஒரு ஊசியும் போட்டார்.

வைத்தியர் போனார்.

சுந்தரம் நின்றான்.

பாலன் வந்தான்; சாரதை அடுப்பங்கரைப் பக்கம் சென்று விட்டாள்.

''வாருங்கள்!'' என்றுகூட வரவேற்காமல், ''எப்பொழுது வந்தீர்கள்?'' என்று கேட்டான், பாலன்.

''மாலையில்தான்'' என்று அக்கறையில்லாமல் பதில் சொன்னான் சுந்தரம்.

மனிதன், பெண்ணெடுப்பவனாகவே இருந்து விட்டால் தொல்லை இல்லை. பெண்ணைக் கொடுப்பவனுக்குத்தான் ''மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத'' சந்தர்ப்பங்கள் அதிகம்.

''சாப்பிட்டுவிட்டீர்களா?'' என்று கடமைக்காகக் கேட்டு வைத்தான், பாலன்.

......பாலன்......

''சாப்பாடா செல்லும்?'' என்று கேள்வியில் பதில் தந்தான் சுந்தரம்.

பாலன், சுந்தரத்தின் மனநிலையைப் புரிந்துகொண்டான். அடுத்தொரு கேள்வியும்போடாமல் தன் அறைக்குச் சென்று படுத்துக் கொண்டான். சுந்தரமும் சாரதையும் கண்விழித்தபடி, இந்திராவின் அருகிலேயே இருந்தார்கள். சுந்தரத்திற்கு ஏற்பட்டிருந்த குழப்பமெல்லாம், ''இந்திரா ஊமத்தை விதை தின்னவேண்டிய அவசியம் என்ன வந்தது?'' என்பது தான்.

இரவு சுமார் இரண்டு மணியிருக்கும். சுந்தரம், பாலனின் அறைக்குள் மெதுவாக எட்டிப் பார்த்தான். பாலன், அங்கே அளவிலா நிம்மதியோடு தூங்கிக் கொண்டிருந்தான். 'இவனுக்கென்ன! இது போனால் இன்னொன்று! நம்மையல்லவா ரத்த பாசம் கொல்கிறது!'' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டே, கமலம் உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்தான், சுந்தரம். கமலம், அங்கே தீயிடைப்பட்ட புழுவாகத் துடிக்கும் மனதோடு அமர்ந்திருந்தாள்.

''கமலம்!'' என்று அழைத்தான், அவன்.

''அண்ணா!'' என்று எழுந்தாள், அவள்.

''என்னம்மா நடந்தது? இந்திரா, ஏன் ஊமத்தை விதை தின்றாள்? எப்போது தின்றாள்? உனக்குத் தெரியாதா? சொல்லம்மா!'' என்றான்.

''எனக்கொன்றும் தெரியாதண்ணா! எப்போதும் போலத்தான் இருந்தாள்...திடீரென்று, காலையில் இப்படி ஆகிவிட்டாள்...' என்று, உமிழ்நீரை உள்ளிழுத்துக் கொண்டே பேசினாள், கமலம்.

சுந்தரம் ஒன்றும் புரியாமல் குழம்பினான். உடனே ஒரு முடிவுக்கு வந்தான். மறுநாளே, புதுக்கோட்டைக்குப் புறப்படுவது என்பதுதான் அது. அதைச் சாரதையிடம் வெளியிட்டான்.

''இந்திரா?'' என்று ஐயத்தோடு வினவினாள், சாரதை.

''அவள் இல்லாமலா! கமலத்தையும் அழைத்துக் கொண்டு

......கமலம்......

போய்விடுவோம். பாலன் எக்கேடு கெட்டாலும் சரி!'' என்றான் சுந்தரம்.

மறுநாள் காலை, பாலன் எழுந்து குளிக்காமலேயே வெளியில் புறப்பட்டான். அவன் திரும்பி வந்து பார்த்தபோது, வீடு பூட்டியிருந்தது. பக்கத்து வீட்டுக்காரர்கள், சாவியைக் கொடுத்தார்கள். பாலன் அலட்சியமாக அதைப் பெற்றுக் கொண்டு பெருமூச்சு விட்டான்.

''அப்பாடா! பெரிய தொல்லை தீர்ந்தது!'' என்று வாய்விட்டுச் சொன்னான். கதவைத் திறந்து உள்ளே வந்தான். மாலை 'மெயில்' பத்திரிகை, கதவிடுக்கின் வழியாக உள்ளே போடப்பட்டிருந்தது. எடுத்து விரித்துப் பார்த்தான். திடுக்கிட்டான். அதன் முதற்பக்கத்தில் இருந்த செய்தி அவன் எண்ணத்தைக் கவர்ந்தது.

சங்கரன், கல்கத்தாவில் கைது செய்யப்பட்டுத் திரும்பவும் சிறைக்குள் தள்ளப்பட்டானாம். தாளாத அம்பிகா தற்கொலை புரிந்துகொண்டாளாம்! ''ஐயோ பாவம்!'' என்று அவளுக்கு அனுதாபம் தெரிவித்தது, அவன் வாய்!

இங்கே...

புதுக்கோட்டைக்கு வந்து சேர்ந்த இந்திராவைப் பார்த்து, சின்னப்பரும் மங்கையர்க்கரசியும் கண்ணீர் வடித்தனர். அவளுக்கு வைத்தியம் பார்ப்பதில் முனைந்தனர். சென்னை வைத்தியர் சொன்ன மருந்தையே வாங்கி, ஊசி போட்டு வந்தார்கள்.

மாதங்கள் நான்கு கடந்தன.

இந்திரா குணம் பெற்று வந்தாள். ஆனாலும், பைத்தியத்தின் சாயல் அவள் முகத்தை விட்டு நீங்கவில்லை. தன் நினைவு தெளிவாக வரவில்லை. அதோடு, அவள் அப்போது ஒன்பது மாத கர்ப்பிணியாக இருந்தாள். ''மாதம் ஒன்பது'' என்று பேசிக் கொண்டார்கள், மங்கையர்க்கரசியும் சாரதையும். அதைக் கேட்ட கமலம், ''இங்கே மாதம் நான்கு!'' என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டே வெம்பினாள். ஊரறியாத கரு, உறவு சொல்லமுடியாத கரு, வேர் விட்டு வளர்ந்து கொண்டிருந்தது, அவள் வயிற்றில். அக்காள், சுய நினைவோடு இருந்தால், உடனே திருமணத்தை முடித்து வைத்திருப்பாள். ஆனாலும் இனித் திருமணம் முடித்துத்தான் என்ன பயன்? ஊர், தன்னைப் புனிதவதி என்று ஒப்புமா?—கமலம் துடித்தாள்.

திடீரென்று ஒரு நாள், சாரதையின் பெற்றோர், கோட்டையூரிலிருந்து வந்து சேர்ந்தனர். தங்கள் பக்கத்து ஊரான வேலங்குடியில் திருவிழா நடப்பதாகவும், அதற்கு மங்கையர்க்கரசியின் குடும்பத்தை அழைக்க வந்ததாகவும் கூறினார்கள். மங்கையர்க்கரசி, இந்திராவின் நிலையைக் கூறி மறுத்தாள். ''இந்திராவையும் அழைத்துச் செல்வோம். ஆத்தாள் திருவிழா! ஆடு வெட்டிப் பூசை! மறுக்காதீர்கள்!'' என்று கெஞ்சினாள், சாரதையின் தாய். சாரதையும் கூடச் சேர்ந்து அழைத்தாள். கடைசியில், வருவதாக ஒப்புக்கொண்டாள், மங்கையர்க்கரசி.

சின்னப்பர், ஒரு கொழுத்த கடாவை, பூசைக்கு வெட்டுவதற்காக வாங்கி வந்தார்.

கமலம் அந்தக் கடாவைப் பார்த்துப் புன்னகை புரிந்தாள். எல்லோரும் கோட்டையூருக்கு வந்து சேர்ந்தனர்.

வேலங்குடியில் திருவிழா, களைகட்டிக் கொண்டிருந்தது. ஏராளமான கடாக்களும் கோழிகளும் பலிக்காகக் கொண்டு வரப்பட்டிருந்தன. கரும்புவண்டிகளும், தேங்காய் வண்டிகளும் ஏராளமாக வந்திருந்தன. குங்குமம், விபூதி முதலியவற்றைக் குவித்துவைத்துப் பணமாக்கிக் கொண்டிருந்தார்கள் சிலர். மேளதாளங்கள், கொம்புவாத்தியங்கள், மூலைக்கு மூலை முழங்கிக் கொண்டிருந்தன. தொட்டில் கட்டிக் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு, ஆத்தாள் கோவிலை ஊர்வலம் வந்து கொண்டிருந்தார்கள், சிலர் வேலங்குடிக் காளியாத்தாளின்

— 11-ம் பக்கம் —

பாண்டிமாதேவி

— கண்ணதாசன் —

சேரர்தம் வில்லும் சோழர்தம் புலியும்
செந்தமிழ்ப் பாண்டியன் கயலும்
வீரர்தம் உறவில் வியப்புறும் வகையில்
விண்தொடப் பறந்த அந்நாளில்
போரிடும் போதும் போர்க்களத் திடையே
பூவையர் கைவளை முரசம்
வீரிடும்; ஓசை விளங்கிடும்; இதுவே
விந்தியத் தென்புலப் பாடம்!

இவ்வகைப் பாடம் பற்பல எனினும்
என்முனன் பாண்டியன் நாட்டில்
செவ்விதழ் மின்னாள், செங்கனிச் சாறு
தேன்தொடத் தான்வளர் கோதை
கொவ்வையின் கொடியில் கூடிய கொவ்வை
கோடையில் வாரிபெய் மேகம்
ஒவ்வொரு வீச்சில் ஒவ்வொரு தலையென்(று)
ஓங்கிய காதையிங் குணர்வோம்.

வால்வளைத் தேறிவாய்பிளந் திருக்கும்
வன்புலிக் கொடியுடை சோழன்
பால்நில வொளியில் தேவியின் இதழிற்
பாடிய பாடலின் விளைவாய்
சேல்விழித் 'தோகை நாச்சியார்' எங்கள்
தென்புலப் பொன்னிலே வீழ்ந்து
கால்வளைத் துள்ளக் களிவளைத் தின்பக்
கைவளைத் தற்புதம் தந்தாள்.

அன்னையின் மடியும் பள்ளியும் கூத்தும்
ஆறிரண் டாண்டுகள் தள்ள
சின்னதோர் செல்வம் தெங்கிள நீரின்
திரட்சியில் கண்கருத் தள்ள
கன்னியின் அசைவைக் காண்பவர் நெஞ்சில்
கலையுணர் வூறிட மெள்ள(ப்)
பின்னிய காலிற்பிடரியைச் சாய்த்துப்
'பெரியவள்' ஆயினள்! உள்ள

யாழிடை அரும்பும் மெல்லிய ஓசை
யாதெனக் கேட்பவள் போலும்
தாழிலா வீட்டில் தான்புகுந் துறுத்தும்
சங்கதி வினவுதல் போலும்
ஆழ்கடல் நெஞ்சில் அலைப்புறும் முத்தம்
அறிவதற் கெண்ணுவள் போலும்
தோழியர் விழியைத் தோகைதன் விழியால்
சூழ்ந்தனள் பதில்தரச் சொல்லி!

மின்னலைப் பிளந்து கன்னலைப் பாய்ச்சி
வெண்ணில வொளிமெரு கேற்றி
கன்னிதன் இடையில் கைப்பிடி யளவில்
கலைவரச் செய்ததோர் காலம்,
அண்ணலைத் தேடும் அறிவினைத் தந்து
ஆசையைத் தூண்டிய தெனினும்
இன்னதென் றறியாத் தோழியர் அவளை
'ஏ'னெனக் கேட்டனர் தாமும்.

அன்னவ ரிடையே 'இளங்கனிப் பாடம்'
அறிந்ததோர் கூர்விழிக் கோதை
மின்னலைச் 'சற்று வா'வெனக் கூறி
"மேனியில் மேனியைப் பூட்டும்
பின்னலை உந்தன் பெண்மையும் நாடும்
பேச்சிலும் மூச்சிலும் காதற்
கன்னலைத் தோய்க்கும் கன்னிமை கொண்டாய்
காண்!" எனக் கூறினள் மெல்ல.

நாணிய கோதை கோணிய கோணல்
நாட்டிய காவியம் பாடும்
ஆணியைப் பச்சை மரத்தினில் நன்றாய்
அறைந்தது போல்மனம் ஊன்றும்
பாணினி தோன்றப் "பாடுதி!" என்றாள்
பாடிய பாடலும் காதல்!
கேணியின் நீரே ஆசையின் ஊற்றாய்க்
கிளர்ந்திட மைவிழி மூடும்!

"மெல்லிய ஊசி மேனியின் மீது
மெல்ல விழுந்திடு போதும்
துல்லிய மேனி செந்நிறந் தோயும்
தூயவள் மேனியும் தூய்மை!
வல்லியம் போலும் அண்ணலின் கைகள்
வாள்பிடி வலிவுடைத் தன்றோ?
மெல்லியள் உடலை அன்னவன் தொட்டால்
மீளவும் உயிர்வரல் என்றோ?"

என்றொரு புறத்தே பாணினி யோடும்
இன்முகத் தோழியின் பேச்சு-
தின்றது அவளை!(த்) திரும்பினள்; 'ஏடீ!
செப்பிய தனைத்தையும் கேட்டேன்!
என்உடல் உள்ளம் எவரையும் நாடா(து)
எந்தையும் தாயுமே உலகம்!
கன்னிமை விரதம் கொள்வனென் றாளும்
காதலுக் குடன்பட மாட்டேன்!"

இப்படிப் பூவை பெண்மையின் நலத்துக்(கு)
இழுத்தொரு பூட்டினைப் போட்டாள்!
"அப்படிச் சொல்வாய்! என்னருந் தலைவீ!
அதனையும் பார்க்கிறேன், வாராய்!
விற்பிடிக் காளை கைப்பிடிக் கிடையே
வெண்சிலை மேனியின் நடனம்
தப்புதல் இல்லை! தாயொடு தந்தை
தருவதும் அச்சுகம் இல்லை!

ஒன்றொடும் ஒன்று உயிருடல் தின்று
ஒன்றினுள் ஒன்றென ஒன்றும்
அன்றிலைப் போலும்-மன்றினில் ஆண்பெண்
அன்புறும்! என்பெலாம் சோரும்
தென்றலும் காதற் சேவையில் இறங்கும்
திங்களும் மங்களம் பாடும்
கண்திறந் ததனைக் காண்பதற் கில்லாக்
கன்னியர் கன்னிமை கன்றும்!

என்னருந் தலைவி! நின்மொழி, காளை
எதிர்ப்படு முன்வரு மொழியாம்
சொன்னயந் தோயும் பாண்டிய வழுதித்
தூதுவன் வந்துளன் இன்று!
பன்னவு முடியா அன்னவன் உயிரைப்
பறித்திட உன்விழி தேவை!
சொன்னவன் தூதன்; இன்னமும் அதனைச்
சொல்லிடவில்லை உன் அன்னை!

இங்குள நீயோ கன்னிமை விரதம்
ஏற்பனென் றுரைப்பரிக் கின்றாய்!
தெங்கிள நீரைத் தன்கையிற் கொள்ளத்
தென்னையை நாடிடும் மன்னன்
பங்கினிற் பாதி தங்கிட நெஞ்சைப்
பக்குவம் செய்"யெனத்தோழி
பங்கய மொட்டைப் பாதி விரித்தாள்;
பாதியைத் தோகை விரித்தாள்:

"அப்படி யா? எனைக் கடிமணம் கொள்ள
அலைபுனல் வைகையர் தூது
எப்பொழு திங்கே வந்தது? அடடா!
எங்குநான் அப்பொழு திருந்தேன்?
செப்படி யே! எனைத் தேவியென் றாளும்
செய்தியைத் தந்த தார்வழுதி
எப்படி யிருப்பார்? மாநிற மா? இலை
என்நிற மேஇருப் பாரா?

எத்தனை போர்க்களம் கண்டவர்? எனக்கு
ஏற்றவர் தானா? சொல்வாய்!
இத்தனை நாளும் பாண்டியர் பெருமை
எனக்கறி விக்கவு மில்லை!
பித்தர்கள் என்னைப் பெற்றவர்! அடியே!
பேசடி! கொஞ்சம் பேசு!
சித்திர மார்பக முத்து வடத்தின்
செய்திகள் சொல்லடி சொல்லு!"

புதுப்புன லேறிக் கெண்டை குதிப்பது
போலஅம் மங்கையின் உள்ளம்
குதிப்பது கண்டாள் கோகிலத் தோழி
குப்புற நிலத்தினில் வீழ்ந்து
பதைப்பது போலப் பதறினள்! தலைவி
பதை பதைத்(து) "என்னடி?" என்றாள்!
"இதைப்போ லுமா மனம் பதைக்கிறதோ? அடி
எங்குஉன் கன்னிமை விரதம்?
மதுக்குடித் தவள்போல் ஆடுகின் றாயே!
மனது பொறுத்தமா!' என்றாள்.

தலைவி துடித்தனள்; தோழி சிரித்தனள்
தன்மனம் காதலில் வீழ்ந்து
கலவி வரைக்குங் கண்டத னாலவள்
காதலைப் பெரிதென மதியாள்
புலவியின் படியும் போய்அறி யாதாள்
பெருமை இழந்தனள்; அதனால்
கலையொடு வளையும் கழன்றது, ஓர்முறை
கண்ணை இமைதொடு முன்பே!

"இனியும் 'நாச்சி'யின் இளகிய நெஞ்சை
ஏய்ப்பது சரியன்" றென்று
பனிமொழி வந்தவள் பக்கமி ருந்து
பாலினிற் சிறுமோர் பெய்ய
கனியவள் உள்ளம் தயிரென மாற(க்)
கன்னிமை மத்தெனத் தாக்கும்!
தனிமையம் மத்தைக் கயிறெனக் கட்டித்
தன்மனம் போல இழுக்கும்!

சென்றனள் தோழி! சிந்தனை தலைவியின்
செவ்விய மனத்தினுட் பாடும்
அன்றிர வெல்லாம் வெண்ணில வுடனே
அன்னவள் நெஞ்சுற வாடும்
கன் றொருங்கோழி காலையின் வரவை
கனிவுறக் காதினில் ஓதும்!
முன்னிர வெண்ணம் மூடிட வொண்ணா
மூங்கையள் கண்களும் மலரும்

வட்ட விழிச்சிறு சிட்டொடு பாண்டிய
வழுதி கலந்திடு காலம்
எட்டு முழுப்பகல் எட்டுஇ ராஇவை
ஏகியதும் வரும் என்றார்!
பட்டு முகக்கலைக கட்டழ கென்தமிழ்
பாவை மனம் படும்பாடு
எட்டு வகைத்துயர் எப்படித் தாங்கிடும்
என்பதை அன்னவர் எண்ணார்.

காலை இளங்கதிர் நண்பகல் வெய்யில்செங்
காவி இதழ்க்கடைப் பெண்ணை
வேலை எறிந்து வருந்திடவில்லை; அவ்
வேலையும் அவற்றி னுக்கில்லை.
மாலை வரும் 'மதி மாயவன' கைத்திறம்
மாதவள் நெஞ்சைத் துளைக்கும
சோலை உலாவரும் தென்றலும் மங்கையைச்
சுற்றி வளைத்து மயக்கும்!

நெற்றியில் ஓடிடும் கூந்தலைத் தென்றல்
நீவிடும் போதவள் நெஞ்சம்
கொற்றவன் கைவிரல் தென்றலின் உருவம்
கொண்டு வந்துளதெனக் கொஞ்சும்
பற்றி வளைத்தொரு பூவை எடுத்தவள்
பார்த்திடும் வேளை அப்பூவும்
"மற்றவர் இல்லை! உன் கொற்றவன் தானென"
மங்கையின் இதழ்மேற் றுவும்!

கன்னியின் உடலை நாலிரு நாளிற்
காலுடலாக்கிய காலம்
தென்னவன் வரவைச் செப்பிய படியே
சென்றிடும் மேற்றிசை ஓரம்!
"மன்னவ! வா!" வென வரவுரைத்திடவே
வந்திடும் கீழ்த்திசை நாதம்!
உன்னையும் முந்திக் கண்விழித் தேனென
ஓடிடும் பெண்மன வேகம்!

யானையில் மத்தளம் கூடலன் பெருமை
"யாவரும் காண்!" ெனக்கூறும்
சேனையின் பாடலும் பாண்டிய மன்னன்
சீர்த்தியைச் செவிவிதின் ஓதும்
"மீனவன்! மீனவன்!" என்ற செந்தேனும்
மீன்விழி காதினில் மோதும்;
"தேனவன்! ஆளவந் தானவன்! நாமவன்
சீருக் காணுவம்! வாரும்!"

என்ன மடந்தைதன் சாளரத் தோரம்
ஏகினள் தோழிய ரோடு!
முன்ன நடந்த படைபல கண்டனள்;
மோகன மன்னவன் யானை
அன்ன நடை பயில் கின்றது என்றே
ஆத்திரங் கொண்டனள்! அங்கே
மன்னவ னேறிய மாண்பினிற் களிறும்
மமதையில் வருவது கண்டாள்!

— வேறு —

வான்போழி மதுரைமூதூர்
வையையன் மறவர்கோமான்
தேன்பொழி வதனமீதோர்
சிறுவளை வெடுத்த மீசை
தான்'புறம்' பயிலுமாறோர்
தனிப்புகழ் அணைத்தவாறே
மீன்கொடி தழுவ வந்தான்;
மீனிரண்டவனை ஆளும்!

'இன்னவன்' என்று பாங்கி
இருவிரல் குறித்தகாலை
அன்னவன் மார்பினோடும்
ஆழ்ந்ததன் விழிகணேக்கி
"என்னவன்!" என்பவள் தோகை
ஏழிசை ஒருங்குகூட!
தென்னவன் வருகை அந்தச்
சின்னவள் விழியிற்றேங்கும்.

கச்சியின் நேசவினர்தம்
கைத்திறம் உரைப்பதான
கச்சினைக் கச்சிமூதூர்க்
கைநெசவுற்ற சேலை
கச்சிதமாக மூடக்
களிமுக நிலவின் சாயல்
கற்சிலை வடிவங்காட்டக்
கண்டனன் வழுதிக்கோமான்!

'உண்'ணெனக் கனிகள் வந்தே
உவப்புற அழைப்பதில்லை
வண்ணமென் மலர்கள் தங்கள்
மணம்பெற உரைப்பதில்லை
கன்னிமை மெருகினோடும்
கனிவளர் கொடியின்மாது
'தின்'னெனக் கூறல்போலும்
தென்னவன் வதனநோக்கும்!

கொங்கையள் சனகன் செல்வி
கொண்டதோர் உருவமாற்றம்
நங்கையின் உருவிற்சற்றும்
நடந்திலதெனினும் தேற்த
மங்கையர்க் குரியதான
மதிப்புறும் நாணம் தோன்றிப்
பங்கினைக் கோரும்; பாவைப்
பழமுகம் நிலத்தை நோக்கும்!

தன்னையும் நோக்கிப்பூமி
தன்னையும் நோக்கும் பூவை
தன்னையும் சோழமண்ணின்
தன்மையோ டிணைத்தா ளென்று
மின்னையே இடையினோடும்
வேலினை விழியினோடும்
பொன்னையே உடலினோடும்
பொருத்தினன் சங்கப்பூபன்!

தேக்கிய விழியில் நெஞ்சம்
தேங்கிய தறிந்தயானை
தூக்கியபடியே தூங்கும்;
சூழ்ந்துள படையும் தூங்கும்!
"பாக்கியை மணத்தின் பின்னே
பயிலுக!" என்றாள் தோழி;
தாக்கிய இலக்கின் நீங்கித்
தையலள் சென்றாள், சோர்ந்து!

(அடுத்த இதழில் முடியும்)

ஜூன் முதல், மாதம் மும்முறை!

தென்றல் திரை

ஆசிரியர்: ஜி. நாகராஜன்

*திங்கள்தோறும் 5, 15, 25 தேதிகளில்
எங்கும் கிடைக்கும்*

ஒவ்வொரு இதழிலும்:

★ தென்னகத்துத் திரைவானில் ஒளிபரப்பும் விண்மீன்களின் தேவிட்டாத பேட்டி
★ வீட்டில் நட்சத்திரம்
★ கண்ணில் படாதவர்கள் — டேக்னீஷியன்ஸ் பற்றிய குறிப்புகள்—புதிய பகுதி
★ கூடுதலோ குறைவோ இல்லாத விமர்சனம்
★ வரப்போகும் படங்களின் செய்தித் துணுக்குகள்

★ பத்மினியின் தொடர் கதை
குமாரி இந்திரா எம். ஏ.

12 பக்கங்கள் — விலை அணா 2

★ ஏஜெண்ட் இல்லாத இடங்களுக்கு விண்ணப்பிக்க.

தென்றல் திரை : : சென்னை 5.

20 நாட்களில் 1700 பிரதிகள் விற்பனையாகியிருக்கின்றன! தமிழுக்கோர் தலை சிறந்த காதற்காவியம்! பாராட்டுக் கடிதங்கள் குவிகின்றன! நீங்கள் வாங்கி விட்டீர்களா?

மாங்கனி

— காதற்காவியம் —

*சேரன் செங்குட்டுவனது அமைச்சர்ராம் அரும்பில் வேளாரின் செல்வன் **அடலேறு**, நாடக கணிகை **மாங்கனி**யின்மீது கொண்ட காதலும், மோகூர்ப் படையெடுப்பும், **தென்னரசி பொன்னரசி** சந்திப்பும், மாங்கனி கடத்திச் செல்லப்படுதலும், காதல் உள்ளம் உருகுவதும், படிக்கப் படிக்கத் திகட்டாத நடையில் அள்ளித் தரப்படுகிறது!*

கண்ணதாசன் பாடியது

விலை ரூ. 2-0-0

எழுதுக

நீலா பப்ளிகேஷன்ஸ்
தியாகராயநகரம் :: சென்னை-17.

அரசியல் நாட்குறிப்பு..

மே 24 : டில்லி சர்வகலாசாலையில் பௌத்த மத போதனை இலாகா ஒன்று ஆரம்பிக்கப்படுமென ராஜேந்திர பிரசாத் தெரிவித்தார்.

மே 26 : ரஷ்யாவில் அணுகுண்டு போட எந்த நிமிடமும் தயாராக இருப்பதாக அமெரிக்க விமானப் படைத் தளபதி கூறியுள்ளார்.

மே 27 : பட்டதாரிகள், ஆசிரியர்கள், ஸ்தல ஸ்தாபனங்கள் ஆகியோரின் தேர்தல் தொகுதிகளிலிருந்து ராஜ்ய மேல்சபைத் தேர்தல்களுக்கு, தபால் மூலம் ஓட்டுப் போடும் முறையைக் கையாள்வதால் ஏற்பட்டிருந்த குறைபாடுகள் பற்றித் தேர்தல் கமிஷனுக்குக் கடுமையான புகார்கள் வந்திருப்பதால், மேல் சபைக்கு இனிமேல் நடத்தப்படும் இத்தகைய தல்லாத் தேர்தல்களிலும், தபால் மூலம் ஓட்டுப்போடும் முறைக்குப் பதிலாக, வாக்காளர் நேரில் வந்து ஓட்டுப்போடும் முறையைக் கையாள்வதென்று தேர்தல் குழு முடிவு செய்திருக்கிறது.

மே 28 : அல்ஜீரியா கலகத்தை ஒடுக்குவதற்காக இன்று புறப்பட இருந்த 200 பிரெஞ்சுத் துருப்புகளை ஆர்ப்பாட்டக்காரர் வெற்றிகரமாகத் தடுத்து நிறுத்தினர்.

இமயமலை எவரெஸ்ட் சிகரத்தை ஸ்விட்ஜர்லாந்து கோஷ்டி யொன்று 23-24 தேதியன்று ஏறிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. மலையேறும் போது வழியில் கடுமையாக நோய் வாய்ப்பட்டிருந்த லூச்சிங்கர் என்பவரும் லோட்சி உச்சியை அடைந்தவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மே 31 : ஆந்திர அசெம்பிளிக்குத் தவிர இப்போதுள்ள மக்கள் சபைக்கோ அல்லது மற்றெந்த ராஜ்ய சட்ட சபைகளுக்கோ உப தேர்தல் நடத்தவேண்டாம் என்று தேர்தல் கமிஷன் முடிவு செய்துள்ளது.

நடுநிலைமைக் கமிஷனின் வேலை தாற்காலிகமாக தடைபட்டிருப்பதாக தென் கொரியாவிலுள்ள ஐ. நா. ராணுவத் தலைமை அலுவலகம் அறிவிக்கிறது. கொரியா போர் நிறுத்த உடன்பாட்டைக் கம்யூனிஸ்டுகள் மீறுவதாகப் புகார் கூறப்படுகிறது.

ஜூன் 2 : பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் யூகோஸ்லாவிய ஜனாதிபதி டிட்டோ மாஸ்கோவுக்கு மீண்டும் வருகை புரிந்திருக்கிறார்.

ரஷிய அயல்நாட்டு மந்திரி மாலடோவின் ராஜினாமாவை சோவியத் பார்லிமெண்ட் அங்கீகரித்துவிட்டதாக டாஸ் செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

அறிஞர் அண்ணாவின் இராமநாதபுர மாவட்டச் சுற்றுப்பயணம்

கீழ்க்கண்ட ஊர்களில் சொற்பொழிவாற்றுவார்கள்.

14-6-56	இராமநாதபுரம்
,,	பரமக்குடி
15-6-56	திருவில்லிப்புத்தூர்
,,	தளவாய்புரம்
16-6-56	சாத்தூர்
,,	விருதுநகர்
17-6-56	அருப்புக்கோட்டை

— 8-ம் பக்கத் தொடர்ச்சி —

பெருமைபற்றி, பக்தர்கள் பேசிப் பேசி மகிழ்ந்தார்கள்.

காளியாத்தாளின் கோவிலுக்கு எதிரே ஒரு பலிபீடம். அதில் ஆடுகளும் கடாக்களும் நிறுத்தப்பட்டு, பலிகொடுக்கப்பட்டன.

தலை தனக்கு என ஒத்துக் கொண்டான் பூசாரி.

"தோலைக் கொடு!" எனப் பேசினான், தோல் வியாபாரி.

"கறியைத் தள்ளிவிட்டுப் பிறகு பேசு?" என்று முண்டியடித்துச் சொன்னான், கடாக் கொண்டுவந்த பக்தன்.

"மனிதனும் கொஞ்சம் ஏமாந்தால், இப்படித்தான் அவனை ஆளுக்கொரு பக்கம் பிரித்துக் கொண்டு போய்விடுவார்கள்!" என்பதை நிரூபித்தது, அந்தக் காட்சி.

"நல்ல கடா! எட்டு வீசைக்குக் குறையாது' என்று ஒரு பக்தன், குடும்பத்தோடு குதூகலித்துக் கொண்டிருந்தான்.

காளியாத்தாள் வழக்கம்போல் இதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். குவித்துக் கிடந்த தலையும் தோலும், அவளைத் தேவியாகக் கொண்ட மதத்தின் 'பெருமை'யைப் பாடிக்கொண்டிருந்தன.

அப்போது, இழுத்துவரப்பட்டது, சின்னப்பர் வாங்கிய கடா. பின்னாலேயே சின்னப்பர், மங்கையர்க்கரசி, கமலம், இந்திரா, சாரதை, சுந்தரம், சாரதையின் பெற்றோர் ஆகியோர் வந்தனர். சாரதையின் பெற்றோருக்கு அங்கே தனி மரியாதை நடந்தது. சாரதையின் தந்தைதான் அந்தக் கோவில் நிர்வாகி என்பதால் அவ்வளவு மரியாதை.

மற்றக் குடும்பங்கள் கடா வெட்டும்போது, "பெண்கள் இங்கே நிற்கக்கூடாது" என்பான், பூசாரி.

நிர்வாகியின் உறவினரை அனுமதித்தான்.

இந்திரா, வலப்புறம் நின்றாள்; கமலம் இடப்புறம் நின்றாள். மற்றவர்கள் பின்னால் நின்றார்கள்.

கடாவின் கழுத்தில் மஞ்சள் பூசப்பட்டது.

கமலம், தன் கழுத்தில் பூசுவதாக எண்ணிக்கொண்டாள்.

கடாவின் கழுத்தில் மாலை போடப்பட்டது.

பெரிய வாளை ஓங்கினான், பூசாரி.

படாரென விழுந்தது வெட்டு.

கடா உயிரோடு நின்றது.

ஆனால், ஒரு பெண்ணின் தலை, துடித்துத் துள்ளி விழுந்தது.

"ஓ!" வென அலறிற்றுக் கூட்டம்.

அடுத்த இதழில் முடியும்

— 4-ம் பக்கத் தொடர்ச்சி —

காணப்படுகின்றன இந்த நூலில். இந்தப் பெருங்கதை தமிழிலக்கிய உலகுக்கு ஒரு அழியாத படைப்பு. சாண்டேகரைக் காட்டிலும் ஒரு படி மேலே போயிருக்கிறது ஆசிரியரின் பாத்திர, குண அமைப்பு. இருநூற்றி முப்பத்தாறு பக்கங்கள் போட்டு இரண்டரை ரூபாய் விலையில் இதை வெளியிட்டிருக்கிறார்கள். மேலட்டையை இன்னும் கவர்ச்சிகரமாக அமைத்திருக்கலாம். தமிழகத்தின் ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்க வேண்டிய மகத்தான பெருங்கதை இது.

விலை ரூ. 2-8-0

கிடைக்குமிடம் :

அறிவு நூல் நிலையம்,
405 பெரிய கடை வீதி,
திருச்சிராப்பள்ளி.

—கண்ணதாசன்.

வருந்துகிறோம்

◉

தமிழ்நாட்டின் தலைசிறந்த நடிகைகளில் ஒருவரான திருமதி எம். ஆர். சந்தானலெட்சுமி அவர்கள் 24-5-56ம் தேதியன்று இயற்கை எய்தியது அறிந்து துக்கித்தோம். அவருடைய மறைவு கலையுலகிற்குப் பெருத்த நட்டமாகும். அவரைப் பிரிந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர் தம் குடும்பத்தாருக்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வெண்பாப் போட்டி 29.

ஈற்றடி : **துணிந்தவருக் கில்லை துயர்.**

முடிவு தேதி 23-6-56

முகவரி:— **வெண்பாப் போட்டி, தென்றல், சென்னை-6**

ஸ்தாபிதம் : **21-3-1952.**

பயிற்சிக்கும், வெற்றிக்கும் உத்திரவாதம் !

தபால் மூலம் இலவசக் கல்வி போதனை

'D' குரூப் வகுப்புகள் ஆரம்ப தேதி 15-6-1956.

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்த ஆண், பெண் இருபாலரும், ஹைஸ்கூலிலும் - பள்ளியிலும் இடையே தங்கள் படிப்பை நிறுத்தியவர்களும், S. S. L. C. தேறியவர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தில் இருப்பவர்களும்,

1. இண்டர்மெடியட்	12 போஸ்ட்மேன்
2 சர்விஸ் கமிஷன்	13. E. S. L. C. (8-ம் வகுப்பு)
3. மெட்ரிகுலேஷன்	14. கைத்தறி நெசவு
4. பனாரஸ் மெட்ரிகுலேஷன்	15. விவசாயம்
5. S. S. L. C.	16. ஹிந்தி (56 ஆகஸ்ட்)
6. S. S. L. C. (56 அக்டோபர்)	17. ஹோமியோபதி (தமிழ்)
7 தமிழ் வித்வான் வகுப்புகள்	18. HOMOEOPATHY (ஆங்கிலம்)
8. பிரியூனிவர்சிடி வகுப்பு	19. கிராம மணியம்
9. இண்டர் தமிழ் (D குரூப்)	20. கிராம வைத்தியம்
10. புக்கீப்பிங்	21 கிராம கர்ணம்
11. போஸ்டல் கிளார்க்	22. பேஸிக் ஆங்கிலம்

(A, B, C, D, ஆரம்ப ஆங்கிலப் பாடம் முதல் 5-ம் பாரத்திற்குரிய ஆங்கிலப் பாடம் வரை முதலிய 1956-57ம் வருட சர்க்கார் பரீட்சைகளுக்குத் தபால் மூலம் மாதம் மும்முறை அதாவது 5, 15, 2 தேதிகளில் பாடங்கள் அனுப்பி இலவசமாகப் பயிற்சி அளிக்கப்படும். பரீட்சையின் வெற்றிக்கும் பாடங்கள் தவறாது அனுப்பிப் பயிற்சி அளிக்கப்படும் என்பதற்கும் உத்திரவாதப் பத்திரம் வழங்கப்படும். மேற்கண்டவாறு எம்மால் செய்யத் தவறின் மாணவர்களின் கஷ்ட - நஷ்டங்களுக்கு நமது உத்திரவாதப்பத்திரம் பொறுப்பேற்றுக்கொள்கிறது. அனுபவமும் போதிய திறமையும் வாய்ந்த B.A., L.T., M.A., B.A. வித்வான், டாக்டர் முதலிய நமது ஆசிரியர்களால் எளிய நடையில் மிகத் தெளிவான முறையில் பாடங்கள் தயார் செய்யப்படுகின்றன.)

குறிப்பு :—21-3-1952 முதல் சொந்த அச்சகத்துடன் (பிரஸ்) இலவசக் கல்விப் பணியாற்றிவரும் நமது இன்ஸ்டிடியூட்டில் பிரதி வருடமும் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பயிற்சியடைந்து தேர்வில் வெற்றிபெற்று உத்தியோக உயர்வும், ஊதிய அபிவிருத்தியும் அடைந்துள்ளார்கள். மேலும் 11-1-56, 1-3-56, 27-4-56 ஆகிய தேதிகளில் ஆரம்பமான A, B, C குரூப் வகுப்புகளில் பல நூறு மாணவர்கள் சேர்ந்து பயிற்சி அடைந்து வருகிறார்கள்.

ஆகவே, 15-6-56 முதல் ஆரம்பமாகும் நமது D குரூப் வகுப்புகளின் முழு விவரங்களுக்கு உடன் 2 ஒரு அணா ஸ்டாம்புடன் விண்ணப்பித்து எமது தபால் வகுப்பில் சேர்ந்து இலவசக் கல்விப் பயிற்சி பெறவும்.

போலிக் கல்வி ஸ்தாபனங்களுக்குச் சவால் விடுகிறோம். தமிழ்நாட்டின் தனிப்பெரும் தபால் இலவசக்கல்வி ஸ்தாபனம்.

ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்

ரிஷிவந்தியம் P.O. (via) விழுப்புரம் R.M.S. தென்னாற்காடு ஜில்லா.

28. பால் நிலவே நீயே பகர்.

வெண்பாப் போட்டி 28ன் பரிசு பெற்ற வெண்பாவையும் பிரசுரத்திற்குத் தகுதியுள்ள வெண்பாக்கள் சிலவற்றையும் இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். மீதமுள்ளவை அடுத்த இதழில் வெளியாகும்.

◉ வான்புகழைக் கொண்ட வளமார் திராவிடந்தான்
கோன்முறைமை ஏற்றவுடன் கொண்டாட-நான்வருவேன்
வேல்விழியா ளெண்ணம் வீணாகா தென்றவட்குப்
பால்நிலவே நீயே பகர்.

—இறைமணி, உலகாட்சிக்காடு

★

ஆடும் சிறுவர்க்கு அம்புலியோ அக்களிப்பில்
பாடும் புலவர்க்குப் பைந்தமிழோ-கூடுமன்புக்
கால்கொண்ட நெஞ்சமதில் காட்டும் முகமலரோ
பால்நிலவே நீயே பகர்.

—வள்ளுவனடிப்பொடி, வேம்பன்பட்டி.

★

சொந்தத் தமிழிருக்கச் சொல்லுதற்கு நாமிருக்கக்
கந்தலெனும் இந்தியதைக் காணுவமோ-நிந்தைமிகு
கோல்காட்டி இந்தியதைக் கொள்கவென்பார்
நேர்மையரோ
பால்நிலவே நீயே பகர்,

—ராதாபாய், ஏரிப்பேட்டை.

★

அன்றலர்ந்த மென்மலராள் அன்புத்தேன் தானுடையாள்
இன்றுலர்ந்து வாடுவதும் ஏனோதான் ?-அன்புடையோன்
வேல்விழிசேர் அன்னவளை விட்டுப் பிரிந்தனனோ ?
பால்நிலவே நீயே பகர்.

—ஆ. வி. நாதன், கோவை.

★

நுண்ணறிவும் ஆய்ந்தமைந்த நூலறிவும் ஆன்றஇயல்
எண்ணறிவும் இல்லார் எழுதுவது-மண்ணிடையே
ஆல்போல் தழைத்த அருந்தமிழ்க்குத் தீதென்று
பால்நிலவே நீயே பகர்.

—ஆ. அழகன், புதுச்சேரி.

★

சென்றநல் லாண்டிலே சேர்ந்திருந்த பொன்செல்வம்
இன்றெனை யேனோ பிரிந்துள்ளார்-நன்றுமோ
காலலைக்கும் மென்கொடிக்குக் கம்பு பகையாகில்
பால்நிலவே நீயே பகர்.

—சி. சிவராமலிங்கம், சென்னை-1.

★

நெஞ்சுகடும் புண்ணுய நேரிழையாட் கென்பிரிவுக்
கஞ்சல் எனவுரைகரும் அன்புமொழி,-வெஞ்சமரில்
வேல்கொண்டு மாற்றலரை வீழ்த்தி விரைவரென்று
பால்நிலவே நீயே பகர்.

—க. வீ. வரதன், அயன்புரம்.

★

கத்துகடல் தாண்டிக் கணவன்மார் சென்றிட்டால்
பத்தினிப் பெண்டிர் பரிதவிப்பர்-தித்திக்கும்
காலமெலாம் வீணடிக்கும் வன்கணாளர் தீமைதனைப்
பால்நிலவே நீயே பகர்.

—எஸ். சேதுராமன், யாழ்ப்பாணம்.

★

நின்பயன்கொள் முற்றத்தில் நித்திலப்பூம் பந்தர்க்கீழ்
பன்னிகர்சொற் பாவாய் பிரிவஞ்சேல்-என்றுரைத்தார்
கால்சென்ற நாடேகிக் கண்துஞ்சா என்நிலையைப்
பால்நிலவே நீயே பகர்.

—மு. சு. மணி, குரூர்.

தாலி தரித்தாலே தாரமெனச் சொல்லுவதும்
போலிப் பொருளில் மயங்குவதும்-காலமெலாம்
வேல்விழியைக் கொல்லுவதும் வேண்டுகின்ற செய்கையோ?
பால்நிலவே நீயே பகர்.

—சா. பில்லப்பன், பாகனேரி.

★

தென்றலிடை தான்துவளத் தேன்முல்லை தான்சிரிக்கச்
சென்ற 'முழுநிலவைச்' 'செந்தேனை'-நன்றுள்ளி
வேல்பட்ட நெஞ்சம் வெதும்புமால் என்செய்கோ
பால்நிலவே நீயே பகர்.

—செ. கா. அருணாசலம், செட்டிபாளையம்.

★

செந்தமிழர் தாழ்வடையச் சில்லறைகள் வாழ்வடைய
வந்தவட வர்போல் வசைமலர்-நொந்தழிய
சேல்ஆட அல்லி சிரித்தாட வந்தனையோ ?
பால்நிலவே நீயே பகர்.

—பாவநாசம் பொன்னிவளவன்.

★

பெண்முகத்திற் கொப்பிடவும், பைங்கவிகள் தீட்டிடவும்,
வண்ணமிகு ஓவியமும் வரைதற்கும்-உன்னழகைத்
தாலத்தோர் கையாளுந் தன்மைக்குக் காரணத்தைப்
பால்நிலவே நீயே பகர்.

—மா. பாலசஞ்சீவி, ஒரத்தூர்.

★

தங்கத் தமிழ்நாட்டுத் தீந்தமிழ்க் காரிகையின்
பங்கயப் பூமுகத்தின் பேரழகில்-நெஞ்சிப்பின்
கால்பிடித்துப் பெற்றிட்ட உன்னெழிலில் ஏன் குற்றம் ?
பால்நிலவே நீயே பகர்.

—நா. மு. சிதம்பரன், வெள்ளகோவில்.

★

அன்றிலைப்போ லொன்றுக்கி அம்பொரு வீட்டுதற்
கன்பிலைபோ னீங்கிடவே ஆணையிடும்-என்னெஞ்சைச்
சால்புடைய தென்றவெண்ணத் தப்பன்றோ ? வான்நிகழ்
பால்நிலவே நீயே பகர்.

—கு வே. இராமகோடி, சென்னை-1.

★

ஒருத்திக் கொருவனே ஆவதூஉம் பண்பால்
பரத்தைபலர்க் காவதும் பாரின்-முறையென்பேன்
சூழ்ச்சிமிகு மைவர்க்கும் பெண்டானாள் பொய்க்கற்பைப்
பால்நிலவே நீயே பகர்.

—து. பெருமாள். சென்னை-11.

★

அன்னியரின் ஆட்சி; அயல்மொழியின் நாட்டாண்மை;
கன்னித் தமிழைக் கருவறுக்கும்-எண்ணமிவை
எல்லா மொழித்தேயாம் ஏற்றமுடன் வாழவழி
பால்நிலவே நீயே பகர்.

—பனை, சண்முகம், நெற்குப்பை.

★

தில்லிக்கோல் கண்டாடும் சென்னை "மணி"க்குரங்கின்
சொல்லைப்போய் நம்புவரோ தூமனத்தார்-பல்லிளிக்கும்
வாலில்லா அக்குரங்கின் வம்பளப்பும் நேர்மையதோ
பால்நிலவே நீயே பகர்.

—இசைமணி குருபாதம், திருக்கழுக்குன்றம்.

★

செந்தமிழை மாய்த்திடவே தீமதியால் திட்டமிடும்
தந்திரிகள் நந்தம் தமிழ்நாட்டில்-வந்தினிமேல்
கால்வைக்கக் கூடாது கட்டாயம் என்றவர்க்குப்
பால்நிலவே நீயே பகர்.

—மு. அ. வேணுகோபால், குன்றத்தூர்.

★

வாழ்ந்த திராவிடத்தின் வண்மையினை நன்கறிவாய்
தாழ்ந்தமைக்குக் காரணமும் தானறிவாய் சூழ்ந்தறியார்
பால்மனத்தில் தென்னகத்தின் பண்டை நிலைபதியப்
பால்நிலவே நீயே பகர்.

—வித்துவான் பொ. வேங்கடேசன், நெல்லிக்குப்பம்.

★

ஒண்டொடியாள் உன்பிரிவால் ஊணுறக்கம் இல்லாமல்
கண்ணீரில் மூழ்கிக் கலங்குகிறாள்-வந்தவட்கு
வாழ்வு தந்திடென்று அன்புடனென் காதலன்பாற்
பால்நிலவே நீயே பகர்.

—நுகன்குருசாமி, கமுதி

◉ பரிசுபெற்ற வெண்பா—பரிசு, ஓராண்டு 'தென்றல்' சந்தா.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 1-127, மவுண்ட் ரோடு, சென்னை-6.